

இந்திய ஞானச் சுடர்கள்



டாக்டர் ரெ. மு.

இந்திய ஞானச் சுடர்கள்

— கவிதைகள் —

கவிச்செம்மல், டாக்டர்

ரெ. முத்துக்கணேசன்

விற்பனை உரிமை

செல்வி பதிப்பகம்

செக்காலை ரோடு

காரைக்குடி.

முதற்பதிப்பு 1992 'மே'

விலை ரூ. 14.

வெளியீடு :

பிள்ளையார் பதிப்பகம்

எண் : 1, கல்லுக்கட்டி மேற்கு
காரைக்குடி 623 001.

26-3

தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர்

டாக்டர் **சி. பாலசுப்பிரமணியனார்** அவர்கள்
எம்.ஏ; எம்.லிட்; பி.எச்.டி;

தந்தருளிய

அணிந்துரை

காரைக்குடியில் வாழும் கவிச்செம்மல், அரிமா, கவிஞர்கோ, டாக்டர் ரெ. முத்துக்கணேசனார் மணிவிழா கண்ட மாண்புறு வாழ்வினர்; அறஞ்சார்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவர்; நாட்டு விடுதலைப்போரில் பங்கு கொண்டவர்; அரிமா சங்கத்தின் வழி மக்களுக்கு அரிய தொண்டு செய்துவருபவர்; பன்னூல் ஆக்கியவர்; தெய்வ நாட்டம் உடையவர்; பழுத்த இலக்கியப் படைப்பாளர்; தேர்ந்த கவிஞர்.

பன்னூலாசிரியராகவும், சிறந்த கவிஞராகவும் திகழ்கின்ற பெரியவர் டாக்டர் முத்துக்கணேசனார் அவர்கள் இப்போது ''இந்திய ஞானச் சுடர்கள்'' என்னும் கவிதைநூலை இயற்றித் தமிழ் உலகிற்கு அளித்துள்ளார்கள். அருட் சிந்தனையும், ஆன்மீக நெறி படரும் ஆற்றலும் வாய்ந்த இவர்கள் இந்திய வானில் சுடர் விட்டு மின்னிய உடுக்கலாகத் திகழும் சான்றோர் பலர் குறித்துக் கவிதைப் பூமாலைப் புனைந்திருக்கின்றார்கள்.

இந்தியப்பெருநாட்டில் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்த ஆன்மீக அருளாளர்களை நம் முன் பார்வைக்கும் சிந்தனைக்கும் பயன்பாட்டிற்கும் வைக்கின்றார்கள்.

முதலாவதாக உத்தரப்பிரதேச மாநிலத்தில் தோன்றி, பௌத்த சமயத்திற்கே அணியாகத் திகழும் புத்தர்பெருமான் அவர்களை நம் முன் படைத்துக் காட்டுகின்றார்கள். ஐந்து பாடல்கள் அவர் குறித்து இயற்றியிருந்தாலும் கீழ்க்காணும் இரண்டாவது பாடல் நெஞ்சைப் பிணிக்கும் நேர்மைத்தாய் அமைந்துள்ளது.

''விலங்கென ஆட்டி வெகுளியை ஈந்து
வேதனை அடைந்திட வைக்கும்
புலங்களை வென்று பொறுமையை ஏற்றுப்
புவியினில் வாழ்வினை எய்த
நலங்களைத் 'தம்ம பதமென' ஆய்ந்து
நல்லறம் அருளிய நாதன்
இலங்கிடும் குருவாம் சாக்கிய ஏந்தல்
புத்தரின் இணையடி தொழுவோம்''

இராமானந்தர் என்னும் ஆன்மீக ஞானியை இரண்டு பாடல்களில் வடித்துக் காட்டும் இவர் திறம் போற்றத் தக்கதாகும். பாடல் ஒன்று வருமாறு :

''தூய்மையும் தொண்டும் பூண்டு
தொழும்அடியார் மனத்த கத்தே
தாய்போல வாழும் ஞானி!
சமயம்சொல் தத்துவத்தைத்
தாய்மொழியில் பாட லாகத்
தந்திட்டார்; பாடல் யாவும்
கோயில்சேர் கோபு ரத்தின்
பொற்கலச வடிவம் அம்மா!''

கபீர்தாசர், பலரும் அறிந்து வைத்திருக்கும் பெரு ஞானியாவர். அவரைப் பற்றிக் குறிக்கும்போது, பின் வரும் உணர்வுகளைப் பாட்டில் தேக்கிக் கபீர்தாசரை நம் கண் முன் கொண்டு வரும் கவிஞரின் திறம் பாராட்டி மகிழத்தக்கது.

''பெருமதமாம் இந்துமதத் தத்துவத்தின்
பெருமையெலாம் அறிந்த மேலோன்;
திருமதமாம் இசுலாமின் திறம்வியந்து
தொழநின்று ஞானச் செல்வன்;
இருமதமும் போற்றிசைக்கும் இணையில்லா
ஒருதெய்வக் கொள்கை யாளன்;
திருமனத்தன்; பெரியரெனும் பொருள்படைத்த
'கபீர்தாசர்' திருப்பேர் வாழ்க!''

''கடலலைபோல் ஆசையெலாம் எழுந்தெழுந்து
கண்சிமிட்டச் சிரித்து நோக்கி

அடர்புயலாய் ஆர்த்தெழுந்த வெஞ்சினத்தின்
ஆற்றலையும் அடக்கி ஆளும்

சுடரனையன்; இல்லறத்தின் சுவைதேர்ந்து
மாசிலா மனத்த னாகிக்

கடலனைய புகழ்கொண்ட கபீர்தாசன்
காலமீந்த யோகி யன்றோ!''

இராமாயணக் காப்பியத்தை இந்தி மொழியில் தந்தவர் துளசிதாசர். தேர்ந்த கவிஞராக விளங்கிய இவர் 'ராமசரித மானஸ்' என்னும் இராமபிரானைப் பற்றிய நூலை எழுதிப் புகழ் கொண்டவர். பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்த இவருடைய பெருமையினை நா மணக்க, புகழ் மணக்க, இவர் போற்றியுள்ள திறம் பின்வரும் பாடலால் அறியலாகும்:

''வையகத்தில் வளர்கரும்பில்
வதிந்திருக்கும் சுவைஇனிப்பின்
வளமை போல

மெய்விளக்காம் இராமனையே
நினைந்துருகி மேதினியில்
துளசி தாசர்

செய்யகத்தே நிறைந்திருக்கும்
திருக்காதல் சிறப்போங்க
இசைத்த பாடல்

நெய்விளக்கின் சுடரினைப் போல்
நெடுங்காலம் ஒளிமணக்கும்
நேயம் வாழ்க!''

பஞ்சாப் மாநிலத்தில் பிறந்த குருநானக் சீக்கிய சமயத்துச் சீர்திருத்தவாதி. அவரை ஏழு பாடல்களில்

பாடியுள்ள இவர், தம்முடைய நான்காம் பாடலால் நம் உள்ளத்தில் குடி கொள்கின்றார்.

''நீரினில் பூத்திட் டாலும்
நீரொடு இலைகள் ஒட்டாப்

பேர்பெறும் கமலம் போலப்
பிணைந்திடும் இல்ல றத்தே

சீர்இறை அடியார் வாழ்வு
சிறையிலா வாழ்வாம் என்றே

தேர்மறை ''கிரந்த மாலா''
செப்பிய சித்தன் காண்மின்!''

சமண சமய மகாவீரர், பீகார் மாநிலம் தந்த அருட் செல்வராவர். அவர் குறித்துக் கவிஞர்கோ பாடும் பாடல் உளங்கொளத்தக்கது.

''சுற்றிலுமே இன்பங்கள்
சுவைகாட்டி இழுத்தாலும்

முற்றியநல் புளியோடாய்
வாழ்ந்திடவே முனைந்திடுவீர்;

வெற்றிதரும் ''நல்லொழுக்க
விரதங்கள்'' வகுத்தளித்த

நற்றவத்தர் மகாவீரர்
நல்லடியைப் போற்றுவமே!''

வங்காள மாநிலத்துச் சைத்தனியரும், இராம கிருட்டிண பரம அம்சரும், விவேகானந்தரும், அரவிந் தரும் டாக்டர் முத்துக்கணேசனார் நெஞ்சம் பிணித்த நேர்மையாளர்கள். சைத்தனியர் குறித்து இவர் பாடியுள்ள பாடலும் முறையே இராமகிருட்டிண பரம அம்சர், விவேகானந்தர், அரவிந்தர் ஆகியோர் குறித்து இவர் பாடியுள்ள பாடலும் மீண்டும் மீண்டும் படிக்கத் தூண்டுவனவாகும்.

''மலையை வெட்டிக் கல்லெடுத்து
மாண்பார் சிற்பம் செய்தாலும்...''

''சிந்தையிலே எழுகின்ற
எண்ணமெலாம் திருக்காளி
வடிவா மென்கோ ! ...''

''சடங்கெனும் தளைகள் பூட்டிச்
சாதியாம் நோய்கள் வாட்ட...''

''அருமையுறு வண்ணமதாய் அழகுருவாய்
அன்றலர்ந்த மலர்க ளெல்லாம்...''

மகாராட்டிர மாநிலம் ஞானதேவரையும், நாம தேவரையும், ஏகநாதரையும், துக்காராமையும் வழங்கிய மாநிலமாகும். நிம்பர்க்கரையும், வல்லபரையும் வழங்கியது ஆந்திர மாநிலமாகும். ஞானதேவரைப் பற்றி இவர் பாடியுள்ள பாடல் மீண்டும் மீண்டும் படித்து நெஞ்சில் அசைபோடத் தோன்றும்.

''நெய்கின்ற ஆடை யுள்ளே
நெளிந்தோடும் நூலைப் போலப்

பொய்மாயம் கொண்ட ஞாலப்
புதுவாழ்வின் ஊடே செல்லும்

மெய்ம்மையாம் தத்து வத்தை
மேதினியில் தேடல் ஒன்றே

செய்தவமாம் செய்வீர் என்றார்
சீர்ஞான தேவர் அம்மா!''

கருநாடகம் தந்த அருளாளர்கள் மத்துவரும், பசவண்ணரும் ஆவர். பசவண்ணர் குறித்துக் கவிஞர் பாடியுள்ள பாடல் ஓசை நயம் ததும்பி கருத்தாழமும் நிரம்பி ஒளிர்கின்றது.

''காணுகின்ற காட்சியெலாம் சிவனே என்றும்
கருதுகின்ற உணர்வெல்லாம் சிவனே என்றும்

பேணுகின்ற மந்திரமாம் ஐந்தெ ழுத்தைப்
பெய்மழைபோல் இடையறாது செபிக்க என்றும்

வேணுகுழல் இசைக்கின்ற இசையும் ஈசன்
வேணிபுகழ் பாடிவரும் நாதம் என்றும்

ஆண்டவன்தாள் மறவாத வீர சைவர்
பசவண்ணர் பகர்ந்திட்டார்; மறைகள் அம்மா!''

கேரள மாநில சங்கரர் அனைத்திந்தியப் புகழ் பெற்ற அருந்தவ ஞானியாவர். உவமையில் தொடங்கி தொழுவதில் முடியும் சங்கரர் பற்றிய பாடல் ஒரு சந்தப் பாடல் எனலாம்.

''காவினில் பூத்துக் கலைசிவம் உணர்த்தும்
கடிமலர்க் கொன்றையே போல

நாவினில் பிறந்து நானிலம் ஆளும்
நான்மறை நாதமே போல,

பூவினில் உயிர்க்குப் புலமையைப் புகட்டப்
புகழுடைக் காலடி உதித்தோன்;

பாவினில் துதிகள் படைத்திடும் ஆதி
சங்கரன் பதமலர் தொழுவாம்!''

தமிழ்நாடு எண்ணற்ற ஆன்றோர்களை உலகிற்குத் தந்த உயர்பெரும் நாடாகும். திருமூலர் தொடங்கி இரமணர் வரையில் தவஞானியர் பலரை அறிஞர் நமக்கு அறிமுகப்படுத்தியுள்ளார். திருமூலரை அறிமுகப் படுத்தும் பாடல் நம் நெஞ்சை அள்ளுகின்றது.

''துன்பம், கவலை தமைப்போக்கித்
தொடரும் வினைகள் தமைமாய்த்தே

அன்பு வழியில் இறைவனையே
அடையும் வகையாம் ஆகமத்தை

என்பும் உருகும் மந்திரமாய்
எழுதித் தந்தார் கவியுருவில்

தென்னன் தமிழ்க்கோர் மூலனவன்
தேவன் மூலன் தாள்பணிவோம்!''

திருஞானசம்பந்தர் குறித்தும், திருநாவுக்கரசர் குறித்தும் கவிஞர் வழங்கியுள்ள பாடல்கள் பின்வருவன வாகும்.

''செந்தமிழில் பண்ணொழுகச் சிவனார்தம்
திருத்தலங்கள் பலவும் பாடி......''

''அஞ்செழுத்தின் புனைபிடித்தே உழவாரப்
படையேந்தி அரன்தன் நாமம்.....''

நம்மாழ்வார் வாழ்க்கைத்தத்துவத்தை ஒரே ஒரு பாடலில் உளப்படுத்தி நிற்கும் கவிஞரின் அறிவாற்றல் போற்றத்தக்கது. மாணிக்கவாசகர் குறித்துப் பாடியுள்ள மூன்று பாடல்களில் முதற்பாடல் படித்த அளவிலேயே நம்மைப் பணித்து நிற்கின்றது.

''மன்னுயிர்கள் காதலிகள்;
மாமாயன் காதலன்காண்;
என்ப தற்கோ,

இன்பமுத மாறனவன்
ஏந்தலவன் துழாய்மாலை
உவந்து சூடும்.....''

''திருவிளக்கே! அறியாமை இருளகற்றும்
சித்தாந்த தத்து வத்தைத்

தருவிளக்கே! தவமுடையார் சிந்தையுளும்
புகுந்துவிடும் தன்மு னைப்பின்......''

இராமாநுசர், பட்டினத்துப்பிள்ளையார், மெய் கண்டார், அருணகிரிநாதர், தாயுமானவர், தியாகராசர் இராமலிங்கர், இரமணர் முதலிய தவச்சான்றோர் களைப் பற்றி கவிஞர்கோ அவர்கள் உணர்வுக்கவிதை களை உயிரோட்டமாக வடித்துள்ளார். கவிதை நூலினுள் நுழைந்து கவி இன்பத்தினைத்தட்டாமற் பெற்றால்தான் செஞ்செற்கவி இன்பத்தின் சீர்த்தி யினை ஒருவர் அறிய முடியும்.

நாடுஅறிந்த நல்ல கவிஞர் டாக்டர் முத்துக் கணேசனார் இன்னும் பன்னெடுங்காலம் வாழ்ந்து, தமிழன்னைக்குக் கவிதை மாலைகளைப் புனைந்து, தமிழன்னையை அணி செய்வாராக! ஒரு நல்லகவிதைத் தொகுப்பினை-நெஞ்சத்தை நிறைவிக்கின்ற கவிதைத் தொகுப்பினை-அருளாளர்தம் சிந்தனைகளை நம்முன் கொண்டு வரும் உயர்கவிதைத் தொகுதியினைத்-தமிழ் கூறு நல்லுலகிற்கு அறிமுகம் செய்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

வாழ்க கவிஞர்!

வளர்க அவர்தம் கவிதைத்திறன்!

நிறைக செஞ்சொற் கவியின்பம்!

சி. பாலசுப்பிரமணியன்
30—4—92

என் உரை

இந்தியாவை, ஞானபூமி என்று உலகினர் சொல்லுவார்கள். கவியரசர் பாரதியாரும் இந்தியாவின் பெருமையைக் கூறும் பொழுது 'ஞானத்திலே பரமோனத்திலே' உயர்ந்த நாடு என்று கூறுவார். உண்மையில் வேதகாலந் தொட்டே இந்தியா ஆன்மிகத்தின் பிறப்பிடமாக, தொட்டிலாகத் திகழ்ந்து வருகின்றது. அது வேதங்களேயும், உபநிடதங்களேயும், பிரம்ம சூத்திரத்தையும், பகவத் கீதையையும், இதிகாசங்களேயும், திருக்குறளேயும், தேவாரத் திருவாசகத் திருமுறைகளேயும், நாலாயிர திவ்யப் பிரபந்தங்களேயும், சிவஞான போதத்தையும் தன்னுள் கொண்டு வளர்ந்து நிற்கின்றது. மேலும் அது, ஆன்மா இறையைக் கண்டு இன்பந்துய்க்க அனுபூதிக் கலேயைத் தோற்றுவித்தது; பக்தியையும் ஞான யோக வழிகளேயும் பரப்பியது; ஞானியர்தோன்ற வழிவகுத்தது. இவ்வாறு இந்தியா தானும் வளர்ந்து, மற்ற நாட்டவர்களுக்கும் ஞானச் செல்வங்களே வாரி வழங்கி நிற்பதை நாம் காணலாம்.

இந்தியா, ஞானச் செல்வத்தை நானிலத்திற்கு வழங்கிப் புகழ் கொள்வதற்குச் சிறப்பாகத் தொண்டாற்றியவர்கள் ஞானியர்களேயாவார்; இவ்வுலகம், பாசம்-ஆசை – ஆணவம் – முதலியவற்றால் சூழ்ந்து, அறியாமையில் மூழ்கியிருக்கக் கண்டார்கள் அனுபூதிமான்கள். அதனுல், அவர்கள் தங்கள் உள்ளத்தைப் புறத்தே செல்ல விடாமல், அடக்கி ஒருநிலேப் படுத்தும் பயிற்

சியை மேற்கொண்டார்கள்; தங்கள் உள்ளத்துக்குள்ளேயே இறையை நினைந்து தியானம் செய்யத் தொடங்கினார்கள். தங்கள் ஆன்மாவின் துணை கொண்டே இறையை உறவாக்கி உணர்வால் சிந்தித்தார்கள். இத் தியான சிந்தனையால், அறியாமை அகன்று, ஞானம் பிறக்கக் கண்டார்கள். அந்த ஞான ஒளியில் இறையருளின் பேரின்பத்தைத் துய்த்தார்கள். இவ்வகையில், ஞான யோகம் பயின்று இறையருளைப் பெற்ற அனுபூதிமான்களை, மக்கள் ''ஞானியர்'' என்றே அழைக்கத் தொடங்கினர்.

இந்தியாவில், இத்தகைய ஞானியர்கள் கங்கை, யமுனை, நருமதை, மகாநதி, கோதாவரி, கிருஷ்ணை, காவிரி, வையை, பொருநை முதலிய புனித ஆறுகளின் அரவணைப்பில் வளர்ந்தார்கள்; அவற்றின் கரையோரங்களே இவர்களுக்கு, ஞானப் பள்ளிகளாக, பண்ணைகளாக அமைந்தன. இவ்வாறு உருவான ஞானியருள் சிலர் இறைவனைத் தலைவனாகக் கண்டு போற்றினார்கள்; மேலும் சிலர் இறைவனைத் தோழனாகக் கண்டு துணையாக்கிக் கொண்டார்கள்; இன்னும் சிலர் நாயகனாக் கொண்டு, தங்கள் ஆன்மக் காதல் அன்பைப் பொழிந்தார்கள்.

இறைவன்பால் உறவு கொண்ட இந்த ஞானச் சுடர்களாகிய ஞானியர் இவ்வுலகைப் பற்றியும் சிந்தித்தார்கள்; மனித குலம் உய்வதற்கு, அதன் ஆன்ம வாழ்க்கையும், உலகவாழ்க்கையும், இணைந்து செயற்பட வேண்டுமென்று எண்ணினார்கள்; அதற்கு

அனுபூதிக் கருத்துக்களை மக்களிடையே பரப்பும் தொண்டினை மேற்கொண்டார்கள். உலகில், நிலையாமையை எடுத்துக் கூறி, நிலையுள்ள செம்பொருளாகிய இறைவனைப் பற்றவேண்டு மென்று போதித்தார்கள்; உலகிற்குத் தேவன் ஒருவனே என்னும் ஒரு தெய்வக் கொள்கையை உறுதியாக எடுத்துரைத்தார்கள்; அத்தேவனை அடைய, ஒரு சிலர் வேதநெறியை விளக்கினார்கள்; ஒரு சிலர் பத்தி நெறியைப் பரப்பினார்கள்; ஒரு சிலர் யோக நெறியின் உண்மைகளை உரைத்தார்கள்; ஒருசிலர் ஞான நெறியினை நவின்றனர்.

இத்தகைய ஞானச் செல்வர்கள், இந்தியாவில் பலமாநிலங்களில், பல்வேறு காலங்களில், பல்வேறு சூழ்நிலைகளில் தோன்றியவராவர். இப்பெருமக்கள் உத்தரப் பிரதேசம், பஞ்சாப், பீகார், வங்காளம், மகாராட்டிரம், ஆந்திரம், கருநாடகம், கேரளம், தமிழ்நாடு முதலிய இந்திய மாநிலங்கள் பலவற்றுள்ளும் வாழ்ந்தவர்கள். இவர்களை யெல்லாம் ஒரு சேரத் தொகுத்து, ''இந்திய ஞானச் சுடர்கள்'' என்னும் இந்த நூலில் 36 ஞானியர்களை நாம் அறிமுகப் படுத்துகிறோம். இம் முப்பத்தாறு ஞானியரும் மக்கள் சமுதாயத்திற்கு ஒவ்வொரு வகையில் தொண்டாற்றிப் புகழ் பெற்றவராவர். இவர்களுள் சிலர் சிற்றரசர்களாகப் பிறந்து, பின் ஞானம் பெற்றவர்கள்; வேறு சிலர் இல்லறம் நடத்திப் பின் துறவு பூண்டு, ஞானம் பெற்றவர்கள்; இன்னும் சிலர் இல்லறத்திலிருந்து கொண்டே இறை ஞானம் சித்திக்கப் பெற்றவர்கள். இவ்வாறு, பலதுறை ஞானியரும் இதில் இடம் பெற்றுள்ளனர். சைவ சித்

தாந்தம் முப்பத்தாறு தத்துவங்களைப் பற்றிப் பேசும். ஒருவகையில், அந்த எண்ணிக் கையை மனத்துட்கொண்டு, முப்பத்தாறு ஞானப் பெருமக்களை, கவிதை வடிவில் இங்கு தந்துள்ளேன். பாடல்கள் பல்வேறு காலங்களில் பாடப்பெற்றவை. ஆன்ம நேயம் கொண்டு ஞானஒளி பரப்பிய இந்த ஞானியர் களும் இவரனைய ஞானச் செல்வர் பிறரும், இந்நாட்டு மக்களிடையே இந்திய ஒருமைப் பாடும், ஆன்ம நேய ஒருமைப்பாடும் தழைத் தோங்க வழிகாட்டும் தவச்செல்வர்கள் ஆவார்கள்.

உலகம் உய்ய வழிகாட்டி வாழ்ந்த, ஞானச்சுடர்களாகிய இந்த ஞானியர்தம் தாள் களைப் பணிந்து இந்த நூலை உங்கள் முன் படைக்கின்றேன். தமிழ் கூறும் நல்லுலகம் இதனை ஏற்றுப் போற்றி வாழ்த்துவதாக!

—ரெ. முத்துக்கணேசன்

நன்றியுரை

இந்நூல் 3—5—1992-ல் காரைக்குடி அரிமா சங்கத்தின் **வெள்ளி விழாவில்** அரிமா சங்கத்தாரால் வெளியிடப்பெற்றது. நூல் வெளியீடு செய்த, மதிப்பிற்குரிய ஆளுநர் அரிமா என். ஏ. கே. கோபால கிருஷ்ண ராஜா அவர்களுக்கும் காரைக்குடி அரிமா சங்க உறுப்பினர்களுக்கும் அரிமா சங்க நிருவாகக்குழுவினர்களுக்கும் விழாக் குழுவினர்களுக்கும் என் நன்றி.

— டாக்டர் ரெ. மு.

ஆசிரியரின் பிற நூல்கள்

கவிதை

1 நல்லுரை வெண்பா
2 முத்து மாலை
3 அமுதம் (குழந்தைப் பாடல்கள்)

கட்டுரை

4 தமிழர் வாழ்த்து
5 சித்தர் நெறி

உரைநூல்

6 முத்தொள்ளாயிரம்
7 தமிழ்த்தொகை
8 ஞானத்தமிழ்
9 தேவாரத் திருமொழிகள்

தொகுப்பு நூல்

10 தேவாரம்
11 ஆழ்வார்கள் அருளிய தமிழ்மறைகள்
12 செவ்வலூர் மதுவநாயகியம்மை பதிற்றுப்பத்தந்தாதி

பொருள்

உத்தரப்பிரதேச மாநிலம்

புத்தர்

1

அறிவிலே தூய்மை அகத்திலே வாய்மை
அன்பிலே இன்பமர் நிறைவு
நெறியிலே உறுதி நினைவெலாம் ''துக்க
நீக்கமே'' தரிசன வாழ்வு
வெறியுணர் ஆசை வினையெலாம் போக்கும்
விதிகளை வகுத்திடும் ஞான
அறிவுரு வடிவாம் அருளுடைக் கௌதம
புத்தரின் அடியிணை தொழுவாம்.

2

விலங்கென ஆட்டி வெகுளியை ஈந்து
வேதனை அடைந்திட வைக்கும்
புலங்களை வென்று பொறுமையை ஏற்றுப்
புவியினில் வாழ்வினை எய்த
நலங்களைத் ''தம்ம பதமென'' ஆய்ந்து
நல்லறம் அருளிய நாதன்
இலங்கிடும் குருவாம் சாக்கிய ஏந்தல்
புத்தரின் இணையடி தொழுவாம்.

3

விதிதரச் சிலந்தி விளைத்தநூல் வலையுள்
விரைவினில் சிறைப்படு மாபோல்
சதிசெயும் ஆசைத் தளையினில் உயிர்கள்
சரிந்திடா விடுதலை பெறவே
மதியினில் தவமும் மனத்தினில் அறமும்
மாண்புறு ஒழுக்கமும் உரைத்துக்
கதிதரும் போதி மாதவன் முதல்வன்
புத்தரின் கழலிணைத் தொழுவாம்.

மெல்லிய கொடியால் மேகலைத் துகிலால்
 மெருகிடும் சித்திரத் தேரைப்
பல்பொருள் வேருய்ப் பாங்குறப் பிரித்தால்
 பசியதேர் மறைந்திடு மாபோல்
தொல்பொருள் வேருய் தொகுத்தஇவ் வுலகின்
 தோற்றமும் நிலையிலை என்றே
பல்லற ஆழி உருட்டிய பகவர்
 புத்தரின் பதமலர் தொழுவாம்.

5

அருவினைத் துணையாம் ஐந்திணைக் கொண்டும்
 அறிவொடு தவத்தினில் அழுந்தி,
எரிசுடர் விளக்காம் சத்திய விளக்கை
 இதயமாம் அகலில் ஏற்றக்
கருவியாம் சங்கக் காப்பினை அமைத்துக்
 காத்திடும் புண்ணியச் செல்வன்
திருவியல் முறையைச் செப்பிய முனிவன்
 புத்தரின் திருவடி தொழுவாம்.

குறிப்பு :

புத்தர் உத்தரப் பிரதேசம் தந்த ஞானியாவார். இவர் கி. மு. 563 ஆம் ஆண்டில் பிறந்தவர். இவர் தம் இயற் பெயர் சித்தார்த்தர்; குலப் பெயர் கௌதமர்; ஞானம் பெற்றபின் ஏற்பட்ட பெயர் சுதாகரர் என்பது.

புத்தர் என்னும் சொல்லே ஞானி எனப் பொருள்

படுவதாகும். இவர் ஞானம் பெற்ற இடம் பீகார் மாநிலத்தில் உள்ள கயா ஆகும். புத்தர் ஞானம் பெற்ற பின் புத்த சங்கத்தை நிறுவினர்.

புத்தர் கடவுள் பற்றி ஒன்றும் கூறவில்லே. இவ்வுலக வாழ்வில் துக்கம் ஏற்படுகின்றது; அத் துக்கத்திற்கு அடிப்படை ஆசை. ஆகவே ஆசையை ஒழித்தால் இம்மண்ணுலகிலே அருள் பெற்ற வாழ்வை, முழுத்தன்மை பெற்ற வாழ்வை அடைய முடியும் என்பதே இவர்தம் கொள்கையாகும்.

மனிதன் துறவு, தியானம், கருணை என்னும் நன் னெறிகளைக் கையாண்டும், நம்பிக்கை — ஆண்மை — பற்றின்மை — உள்ளுணர்வு — மெய்யறிவு — என்னும் ஐந்து பண்புகளைத் துணையாகக் கொண்டும், தவத்தினை மேற்கொண்டொழுகினுல் அவனுக்கு ஞானம் தானே பிறக்கும். அப்பொழுது அவன் பிறவிப் பிணியினின்றும் நீங்குகிருன் என்று புத்தர் மொழிகின்ருர்.

புத்தர் பெருமான் மொழிந்த அறமொழிகளைத் தொகுத்துள்ள தொகுப்பிற்குத் 'தம்மபதம்' என்பது பெயர். இம் மறை நூல் மொத்தம் 423 திருமொழி களால் ஆனது. புத்தர் தம் அறவுரைகளைப் பாலி மொழியில் புகன்றுள்ளார்.

இராமானந்தர்

1

ஓடிவரும் நதிகள் யாவும்
ஊர்தோறும் உயிரி னங்கள்
நாடிவரப் பேத மின்றி
நன்னீரை வழங்கு மாபோல்
கூடிவரும் பத்த ருள்ளே
குலம்காணு தரவ ணைத்தே
ஈடில்லா அன்பைக் கொட்டும்
எளியகுரு இராமா னந்தர்!

2

தூய்மையும் தொண்டும் பூண்டு
தொழும்அடியார் மனத்த கத்தே
தாய்போல வாழும் ஞானி!
சமயம்சொல் தத்துவத்தைத்
தாய்மொழியில் பாட லாகத்
தந்திட்டார்; பாடல் யாவும்
கோயில்சேர் கோபு ரத்தின்
பொற்கலச வடிவம் அம்மா!

குறிப்பு :

இராமானந்தர் உத்தரப்பிரதேசம் தந்த ஞானி

யாவார்; இவர் (கி. பி. 1299-1410) பதின்மூன்றும் நூற்றுண்டில் வாழ்ந்தவர்.

இராமாநுசருடைய வைணவக் கொள்கையைப் பரப்பியவர், இவரது பாடலொன்று சீக்கியர் சமய நூலாகிய 'கிரந்த சாகேப்' என்னும் நூலில் சேர்க்கப் பட்டுள்ளது.

இவர்தம் மாணவர்கள் இரவிதாசர், கபீர், துளசி தாசர், பவானந்தர், பத்மாவதி முதலியோர் ஆவர்.

கபீர் தாசர்

1

பெருமதமாம் இந்துமதத் தத்துவத்தின்
பெருமையெலாம் அறிந்த மேலோன்;
திருமதமாம் இசுலாமின் திறம்வியந்து
தொழநின்ற ஞானச் செல்வன்;
இருமதமும் போற்றிசைக்கும் இணையில்லா
ஒருதெய்வக் கொள்கை யாளன்;
திருமனத்தன்; பெரியரெனும் பொருள்படைத்த
'கபீர்தாசர்' திருப்பேர் வாழ்க!

2

பனிக்காலத் தென்றல்போல் அடக்கமாக
மதஉலகின் பணியை ஏற்ருேன்;
இனிக்கின்ற இசைப்பாவில் இறைஉணர்வை
இதயத்தே பதிக்க வல்லான்;
மனக்கினிய கவிக்கோமான்; பத்தியினைப்
பரப்புதற்கு இந்த மண்ணில்
தனக்குவமை யில்லாத கபீர்தாசின்
தண்ணளியாம் பண்பு வாழ்க!

3

கடலலைபோல் ஆசையெலாம் எழுந்தெழுந்து
கண்சிமிட்டச் சிரித்து நோக்கி,
அடர்புயலாய் ஆர்த்தெழுந்த வெஞ்சினத்தின்
ஆற்றலையும் அடக்கி ஆளும்
சுடரனையன்; இல்லறத்தின் சுவைதேர்ந்து
மாசிலா மனத்த ஞகிக்
கடலனைய புகழ்கொண்ட கபீர்தாசன்
காலமீந்த யோகி யன்ருே!

4

ஈசனுக்கே உருவங்கள் பலநிறுவி
    எழிற்பெயர்கள் பலவும் சூட்டி
வாசமிகு மலர்சாத்தல் சடங்கென்றூர்;
    அருள்தாரா தென்று ரைத்தார்;
நேசமிகு காதலாகி இறையடிக்கே
    அடைக்கலமென் றடைவீ ராகில்
தேசமதில் தெய்வீக அருள்பெற்றுத்
    திகழ்ந்திடுவீர் என்றூர் அண்ணல்!

5

சுற்றுடைய கண்ணுடிக் கூண்டுதனில்
    சுற்றிவரும் விலங்கி னந்தான்
வெற்றுருவாம் தன்னுருவைத் தான்பார்த்து
    வெகுண்டெழுந்து குரைப்ப தேபோல்,
பற்றுமிகு பாசத்தில் வீழ்ந்திங்குப்
    பதருதீர் இறையைக் காட்டும்
கற்றறிவாம் செபம்செய்மின் என்றகபீர்
    கலைவாக்கும் செல்வம் அன்றே!

குறிப்பு :-

கபீர்தாசர் உத்தரப் பிரதேசம் தந்த ஞானியாவார். இவர் (கி. பி 1440–1518) பதினைந்தாம் நூற்றுண்டில் வாழ்ந்தவர். இவர் சமயவாதிகளிடையே வாழ்ந்த சமரசத் தூதர் ஆவர். சாதி-சமயம்—இனம் முதலியவற்றைக் கடந்தவர்; சடங்கு, உருவவழிபாடு முதலியவற்றை எதிர்ப்பவர்; இவருடைய மொழிகளை இவர்தம் சீடர் தர்மதாசர் தொகுத்து உலகுக்கு அளித்துள்ளார். பிரம்மம் என்னும் இறைவன் ஒருவனே. அவனை உள் நினைந்து செபம் செய்வதே இறையருளைப் பெறவழி என்பது இவருடைய போதனையாகும்.

துளசி தாசர்

1

நிலவுலகை உயிர்ப்பிக்கும்
கதிரனையார்; நெடும்பயண
வாழ்வு தன்னில்
புலமையெனும் கலைக்கோலால்
இறையுணர்த்தும் புதுமையினார்;
சந்தப் பாவால்
இலகுபுகழ் சீதைமண
வாளனுக்கே இதயத்தை
அணிக ளாக்கித்
திலகமெனக் கவிபடைத்த
துளசிதாசர் திருவாக்கின்
திறமே காண்மின்!

2

பொருள்களிலே தலைமரமாம்
சந்தனத்தில் புதுமணத்தேன்
ஒழுகு மாபோல்
இருள்விலக்கிக் கலைபொழியும்
சிலைகளிலே இயல்புணர்ச்சி
வழியு மாபோல்
பொருள்நிறைந்த திருக்கதையில்
இராமபிரான் புகழ்வாழ்வைத்
துளசி தாசர்
அருள்மலிந்த அனுபூதி
நெறிததும்ப அளித்தகவி
அழகு காண்மின்!

3

வையகத்தில் வளர்கரும்பில்
வதிந்திருக்கும் சுவைஇனிப்பின்
வளமை போல
மெய்விளக்காம் இராமனையே
நினைந்துருகி மேதினியில்
துளசி தாசர்
செய்யகத்தே நிறைந்திருக்கும்
திருக்காதல் சிறப்போங்க
இசைத்த பாடல்
நெய்விளக்கின் சுடரினைப் போல்
நெடுங்காலம் ஒளிமணக்கும்
நேயம் வாழ்க!

குறிப்பு :-

துளசிதாசர் உத்தரப்பிரதேசம் தந்த ஞானியாவார். இவர் (கி. பி. 1532—1623) பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவர் துறவி; வைணவ பக்தர்; கவிஞர் ஆவார்.

இவர் இராமபிரானைத் தம் வழிபடு கடவுளாகக் கொண்டவர்; அவர் புகழ் பரப்ப எழுதிய நூலே ''ராமசரித மானஸ்'' என்பதாகும். இந்நூலின் மூலம் ஆன்மிகக் கருத்துக்களை நன்கு பதியுமாறு பரப்பினார். இவர் ஆன்மிகத் துறையை ஒருகையிலும் இலக்கியத் துறையை ஒரு கையிலுமாகக் கொண்டவர். ''அறிவினால் இறைவன் அருகில் கூடப் போகமுடியாது, அன்பு ஒன்றுதான் இறைவனிடம் நம்மைச் சேர்க்கும்'' என்னும் அறநெறியை வலியுறுத்தியவர்.

பஞ்சாப் மாநிலம்

குருநானக்

1

மருளுடை மாந்தர் தத்தம்
    மதங்களோ பெரிதென் றெண்ணி
மருள்விழிப் பசுக்க ளாகி
    மறுகியே நின்ற நாளில்
அருள்செறி மதத்திற் கெல்லாம்
    ஆண்டவன் ஒருவன் என்றே
அருள்''குரு நானக்'' தோன்றி
    அறவழி பகர்ந்தான் போற்றி!

2

அழகென இந்து வாக
    அவதரித்தார்; மகுதி தன்னில்
தொழுகையும் செய்தார்; மண்ணில்
    தொடர்ந்திரு மதமும் போற்றப்
பழுதிலா மனத்தி னோடு
    பணிபல ஆற்றிப் பத்தி
மழையினைப் பெய்து மக்கள்
    மனத்தினை ஆளும் ஞானி!

3

நல்லறம், மனத்தில் தூய்மை,
    நற்பணி கொண்ட வாழ்வாம்
இல்லற நெறியில் நின்றே
    இறையருள் பெறலாம் என்றார்;
நல்லவர் சமய மாகச்
    சீக்கிய சமயம் நாட்டிச்
சொல்லிசைக் ''கிரந்தம்'' சொன்ன
    தூயவன் தலைவன் அம்மா!

4

நீரினில் பூத்திட் டாலும்
நீரொடு இலைகள் ஒட்டாப்
பேர்பெறும் கமலம் போலப்
பிணைந்திடும் இல்ல றத்தே
சீர்இறை அடியார் வாழ்வு
சிறையிலா வாழ்வாம் என்றே
தேர்மறை ''கிரந்த மாலா''
செப்பிய சித்தன் காண்மின்!

5

நம்பனை எண்ணும் எண்ணம்
நாட்டிய மத்தி னோடு
தெம்புறு மனக்க யிற்றைச்
சேர்த்திங்கு, தயிராம் நாமும்
நம்பியே கடைவ ராகில்
நல்லருள் வெண்ணெய் என்னும்
செம்பொருள் காண்பர் என்றார்
சீர்மறைப் பாடல் தன்னில்!

6

உறவுசால் உள்ள மென்னும்
அகலிலே, புலனை ஆளும்
அறிவுடை ஞான எண்ணெய்
அளித்திட்டுச், செபித்த லென்னும்
நெறியுடைத் திரியில் உண்மை
நெருப்பிடத் தெய்வம் தன்னை
அறிவொளிச் சுடரே காட்ட
அறியலாம் என்றார் யோகி!

7

ஓதிடும் மந்தி ரத்தார்
சடங்கினை உயிராய்க் கொள்வோர்,
வேதியர், வேள்வி யாளர்,
வினைவழி தெய்வம் காணார்;
காதலால் கசிவா ராகில்
கடவுளைக் காண்பர் என்றே
போதனை தந்த ஞானிப்
புனிதனின் புகழ்கள் வாழ்க!

குறிப்பு :

குருநானக் பஞ்சாப் மாநிலம் தந்த ஞானியாவார். இவர் (கி.பி. 1469-1538) பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். சமயங்களின் பேரால் போரிடுவதைக் கண்டித்து, சமரசநெறியை வலியுறுத்தினார். சீக்கிய மதத்தை நிறுவியவர். இவர்தம் அறிவுரைகளை இசைப் பாடல்களாகப் பாடியுள்ளார். அதில் ''ஜப்ஜி'' (செபங்கள்) என்னும் பாடல்கள் சீக்கிய மதத்தினரால் நாள்தோறும் மந்திரங்களாக ஓதப்படுகின்றன.

குருநானக்கிற்குப் பின் வந்த குரு அர்ஜுன்சிங் என்பவர் நானக்கின் கீதங்களையும், ஏனைய குருமார்களின் கீதங்களையும், கபீர், நாமதேவர், ஞானதேவர், முதலிய ஞானிகளின் இசைப்பாக்களையும் தொகுத்துக் ''கிரந்த மாலா'' என்னும் மந்திரநூலை உருவாக்கினார். இந்த நூலைத்தான் சீக்கிய மதத்தினர் தங்கள் கோயில்களில் வைத்துப் பூசித்துத் தொழுகின்றார்கள்.

பீகார் மாநிலம்

மகாவீரர்

1

சித்தார்த்தர் குலம்விளங்கச்
சிறுமதங்கள் வலியிழப்பத்
தத்துவம்சேர் சமணமதம்
தலமதிலே புகழ்மணக்க
முத்தனைய அறநெறியை
முகிழ்த்திங்கு மனமாண்ட
அத்தனவன் மகாவீரர்
அடியிணையை வழுத்துவமே!

2

புள்ளினம் போல் திரியாது
புலன்களையே அடக்கிடுவீர்;
தெள்ளியநல் அறிவுடைமை
தீய்களவு செய்யாமை
கள்ளமிலா அகிம்சையொடு
வாய்மையினைக் கைக்கொள்வீர்;
உள்ளுதலால் பந்தமற
வீடாமென் றுரைசெய்தார்!

3

சுற்றிலுமே இன்பங்கள்
சுவைகாட்டி இழுத்தாலும்
முற்றியநல் புளியோடாய்
வாழ்ந்திடவே முனைந்திடுவீர்;
வெற்றிதரும் "நல்லொழுக்க
விரதங்கள்" வகுத்தளித்த
நற்றவத்தர் மகாவீரர்
நல்லடியைப் போற்றுவமே!

குறிப்பு :

மகாவீரர் பீகார் மாநிலம் தந்த ஞானியாவார் இவர் கி. மு. 599ல் பிறந்தவர்; குறுநில மன்னர்; இவர் தம் இயற்பெயர் வர்த்தமானர். இவர் இருபத்து நான்காம் தீர்த்தங்கரராகிச் சமண சமயத்தைப் பரப்பியவர். இவர் கடும் தவத்தையும், கடும் விரதம் முதலியவற்றையும் வலியுறுத்தியவர். இவற்றின் மூலம் ஞானம் கைவரப்பெறும் என்றும் கூறியவர்.

இவர் "நல்லொழுக்க விரதங்களை" ச்சமண சமய வித்துக்களாக வகுத்துத் தந்துள்ளார். அவையாவன :

1. அகிம்சை
2. வாய்மை
3. களவு செய்யாமை
4. பிரமச்சரியம்
5. தவம்

வங்காள மாநிலம்

சைத்தனியர்

1

வேரின் வழியே மாமரந்தான்
வேண்டும் வாழ்வைப் பெற்றுவிடும்
தேரும் விதையின் வளமையெலாம்
தேர்ந்த செடியாய் உருவாகும்;
பாரில் அரியின் நாமமதைப்
பாடி உருக அருள்கூடும்;
சீராய் உரைத்தார் சைத்தனியர்
சிறந்த வங்கச் சித்தரவர்!

2

கல்வி மன்றம் தொடங்கியவர்
காக்கும் சமய வைணவத்தை
இல்லம் இருந்தே பரப்பியவர்;
இசையின் உருவாய்க் கேசவனைப்
புல்லி மகிழ்ந்த போதரவர்;
புகழ்சேர் பொருளாம் இசைப்பாவை
வல்ல கலையாய் ஆக்கியுயர்
வாழ்வு தந்த வள்ளலவர்!

3

மலையை வெட்டிக் கல்லெடுத்து
மாண்பார் சிற்பம் செய்தாலும்
கலையை மறைக்க அழுக்கடையும்;
கழுவிக் கலையைக் காப்பதுபோல்
அலையும் வாழ்வில் மாயவினை
அகல நாளும் திண்ணமுடன்
நிலையாய் இசையில் நாரணனை
நினைந்தே இசைப்பீர் என்றிசைத்தார்!

குறிப்பு :

சைத்தனியர் வங்காள மாநிலம் தந்த ஞானியாவார். இவர் (கி. பி. 1486–1534) பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்.

இவர் வைணவ சமயத்தைப் பரப்பியவர்; அதிலும் சிறப்பாக, கிருஷ்ண நாமத்தை, கீர்த்தனை வடிவில் அமைத்துப்பாடிப் பரப்பியவர். கீர்த்தனை மண்டபம் ஒன்றையும் கட்டிவித்தார்.

அன்பு — அழகு — இன்ப வடிவான கிருஷ்ணனே பரப்பிரம்பம் என்பதும், அவன் அழகால் ஈர்த்து நம்மைத் திருத்துகிறான் என்பதும், கிருஷ்ண பிரேமையே ஆன்ம விடுதலைக்கு வித்தாகும் என்பதும் இவர்தம் போதனையாகும். தொண்டாலும், பத்தியாலும் இறைவனை எளிதாக அடையலாம் என்று விளக்கியுள்ளார்.

இராமகிருட்டிண பரமஅம்சர்

1

பிறங்குமுயிர்க் குலமனைத்தும்
    பெருநலங்கள் பலவெய்திக்
        களிக்க நாளும்
திறங்குவிய உள்நோக்கி
    அன்னையவள் திருவுருவைக்
        காணும் ஞானி
அறந்தழையப் பத்திநெறி
    அன்போங்க அகமதிலே
        நிலைத்து நிற்கச்
சிறந்ததவம் புரிஇராம
    கிருட்டிணராம் பரமஅம்சர்
        திருப்பேர் வாழ்க!

2

சிலைவடிவு வளமையொடு
    பொருளனைத்தும் சிறுதூறல்
        அழிவ தேபோல்
நிலமதிலே மறையுமெனும்
    நிலையுண்மை மக்கள்பால்
        விளக்கு தற்குக்
கலைவடிவாம் சிறுகதையில்
    கனிமொழியில் அமுதளிக்கும்
        அறிவுச் செல்வர்
மலைவிளக்குச் சுடரினைப்போல்
    வாழ்வினுக்கு வழிகாட்டும்
        மாண்பு வாழ்க!

3

சிந்தையிலே எழுகின்ற
எண்ணமெலாம் திருக்காளி
வடிவா மென்கோ!
வந்தனைசெய் மாமுனிவோர்
நற்றவங்கள் நின்செயலின்
வடிவா மென்கோ!
அந்தமிலாப் பேரருளை
அவனியெலாம் அடைந்துய்யப்
புகட்டு தற்கு
வந்தமுனி இராமகிருட்
டிணவள்ளல் திருத்தாளை
வணக்கம் செய்வாம்!

குறிப்பு :-

இராமகிருட்டிண பரமஅம்சர் வங்காள மாநிலம் தந்த ஞானியாவார். இவர் (கி. பி. 1836—1886) பத்தொன்பதாம் நூற்றுண்டில் வாழ்ந்தவர்.

இவர் இந்து சமயத் தத்துவங்களைச் சிறுகதைகள் வாயிலாக, எளிதாகப் பரப்பிய சிறுகதைச் சிற்பி!; ஞானப்பயிற்சி அளித்த ஞானகுரு; விவேகானந்தரை உருவாக்கிய வித்தகர்.

இவர், இந்துசமயம் போதிக்கும் கருமம், பத்தி, யோகம், ஞானம் ஆகிய நான்கு நெறிகளையும் அவற்றின் பயன்களையும் கண்டறிந்து உலகினர்க்கு எளிதாக, வழங்கிய யோகியும் ஆவார்.

விவேகானந்தர்

1

செல்வத்தைச் சேர்த்து வைத்தே
செழிப்பெலாம் தமக்கே யாக்கித்
தொல்புகழ் நாட்டைப் பேணுச்
சுயநலம் மிக்கோர் நாளில்
சொற்கவி பிறத்தல் போலத்
தோன்றினன் விவேகானந்தன்;
பல்லறம் தழைக்க ஆன்மக்
கலையொளி பரப்பி நின்ருன்.

2

அருவ, மின் கம்பி பெற்ற
அளவிலாச் சத்தி போலக்
குருவுரு பரம அம்சர்
குளிர்வொடு திருக்கை யாலே
ஒருமுறை தொடஆ னந்தன்
ஒளியுறு ஞானி ஆனுன்;
திருவருள் செல்வம் பெற்ருன்;
திருத்தொண்டின் வடிவம் ஆனுன்.

3

சடங்கெனும் தளைகள் பூட்டிச்
சாதியாம் நோய்கள் வாட்ட
முடங்கிய கால்க ளோடு
முயங்கிய 'சமய' வாழ்வின்
தடங்கலை அகற்றி, வேதத்
தகவெனும் உணர்வை ஈந்தான்;
அடங்கிய ஞான உண்மை
அகிலமே அறிந்த தம்மா!

4

கல்லினுள் மறைந்து காயும்
கனலினை எழுப்பல் போலப்
பல்துறை மனித ருக்குள்
படிந்துறை தெய்வீ கத்தை
மெல்லென வெளிப்ப டுத்தி
மெய்யறம் வளர்த்த மேலோன்;
நல்லதொண் டாற்றும் மாந்தர்
நடமிடும் தெய்வம் என்றான்.

5

'பணிபல ஏற்பீர்'; நாட்டுப்
பற்றினை வளர்ப்பீர்; துன்பப்
பிணியினில் வீழ்ந்து நிற்போர்,
வறுமையைப் பெற்றோர், மற்றும்
அணிசெறி உயிர்க ளுக்கே
அயர்விலா துழைப்பீர்'' என்றான்;
பணிமலை விவேகா னந்தன்
பகர்மொழி வேத மன்றோ!

குறிப்பு :

விவேகானந்தர் வங்காளம் தந்த ஞானியாவார்; இவர் (கி.பி 1863-1902) பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவர்தம் இயற்பெயர் நரேந்திரர்.

இராமகிருட்டிண பரமஅம்சரால் உருவாக்கப் பெற்றவர். இராமகிருட்டிணர் தம்முடைய ஞானச் செல்வத்தை நரேந்திரருக்கு வழங்கினார்.

நரேந்திரர் துறவு பூண்ட நிலையில், விவேகானந்தர் எனப் பெயர் சூட்டப்பெற்றார்; தம் குரு பெயரால், இராமகிருட்டிண மடத்தையும், சங்கத்தையும் நிறுவினார்.

இவர் வேதாந்த ஞான சாத்திர அறிவைத் துணை யாகக் கொண்டு, பாரத நாட்டின் உயிர்ச் சக்தியைத் தட்டி எழுப்பினார்; உலக உயிர்களுக்கும் பணிசெய்தலை முதன்மையாகக் கொள்ளச் செய்தார்; தவம் இயற்றும் முறையில் திட்டங்கள் சிலவற்றை வகுத்தார்; இவ்வழி ஒழுகினால் இறை அருளைப் பெறலாம் என்றார்.

அரவிந்தர்

1

கல்விதரும் பயனிழந்து கலேயிழந்து
பிறர்க்கடிமை பூண்ட நாளில்
அல்லலுறும் மக்களின அவலநிலே
கண்டுருகித் தவமேற் கொண்டோன்;
தொல்வினேயின் துயர்களேயப் புதுவழியில்
அரவிந்த மாத வத்தோன்
பல்கலேசேர் ''யோகமுறைச் சித்தாந்தம்''
பரிவினிலே பகர்ந்தான் போற்றி!

2

வேதத்தின் சுவடறிந்தோன்; வேர்ப்பலாவாம்
உபநிடதச் சார மென்னும்
போதத்தில் தான்மூழ்கி நவமணியாம்
புதுநெறிகள் வகுத்துத் தந்தோன்;
ஓதுசுவைச் சொற்பொருள்போல் உயிர்களெலாம்
ஒவ்வொன்றும் அன்பி ஞலே
காதலுறக் கலந்திட்டால் அவ்வுயிரில்
இறைதங்கும் என்ருன் யோகி!

3

விண்ணகத்தே மறைந்தொளிரும் ஐம்பூதச்
சக்தியொன்றை விரைந்தி ழுத்தே
எண்ணகத்தில் உருவான பொறிஒன்றில்
உள்ளடக்கி இயக்கு மாபோல்,
மண்ணகத்தைத் துறவாமல் மனமடக்கி
உள்நோக்கிப் பயில்வா ரெல்லாம்
மண்ணகத்தில் தெய்வநிலே எய்திடலாம்
எனவுரைத்த மாண்பு காண்மின்!

அருமையுறு வண்ணமதாய் அழகுருவாய்
அன்றலர்ந்த மலர்க ளெல்லாம்
தருபொருளாம் தேன்துளிபோல், தாரணியில்
ஆசையெனும் மாச கற்றி,
வருபயனும், தெய்வீக வளரொளியை
வழுத்திநிதம் உருகு வார்க்குத்
திருமனத்தில் அமுதூறி அருளுமென்றுன்
திருமொழிக்கோர் ஈடும் உண்டோ!

குறிப்பு :

அரவிந்தர் வங்காள மாநிலம் தந்த ஞானியாவார்; இவர் 15. 8. 1872ல் பிறந்தவர். பத்தொன்பதாம் நூற்ருண்டில் வாழ்ந்தவர். இவர்தம் நூல்கள்:– தேவஜீவனம், யோக இணைப்பு, வேதரகசியம் முதலியன. மற்றும் ஆங்கிலத்தில் எழுதிய புத்தகங்கள் பலவாகும்.

இவர் மேற்கொண்டது யோக முறைச் சித்தாந்த நெறியாகும். இவ்வுலகில் பிறப்பெடுத்த மனிதன், இவ்வுலகமானது பொய்யென்றும், நிலையில்லாத தென்றும் எண்ணித்துறக்க வேண்டாம். தன்னுள் எழும் ஆசை, ஆணவம், பொருமை, சினம் முதலிய கீழ் உணர்வை அடக்கி, யோக முறையில் உள்நினைந்து தெய்வ உணர்வை வளர்க்க வேண்டும். அவ்வுணர்வு தானே வளர்ந்து அருள் உணர்வாகி மனிதனைத் தூய்மை பெற்ற மனிதனுக, தெய்வீக மனிதனுக இவ்வுலகில் வாழச் செய்யும் என்பது அரவிந்தரின் யோக முறைச் சித்தாந்தக் கோட்பாடாகும்.

மகாராட்டிர மாநிலம்

ஞான தேவர்

1

வேதங்கள் நான்கும் கற்றோம்
விதித்திட்ட எங்கள் சொல்லே
வேதங்கள் என்றார், தம்மின்
வீண்செருக்கை எதிர்த்த யோகி!
கீதைக்குக் கவிதை யாலே
கெழுமைசேர் உரையைக் கண்டு
போதத்தை வளர்த்தார் ஞான
தேவராம் புதுமை ஞானி!

2

இன்பமரும் குழல்ப யின்றார்
இசைத்திடவே இன்பம் பெய்யும்;
அன்பமரும் இல்ல றத்தே
அறத்தொண்டு செய்வா ருக்கே
தன்வாழ்வில் புகழ்கள் சேரும்;
தழைத்தபே ரன்பும் தொண்டும்
மன்னுலகச் செல்வம் என்றார்
மாகவிஞர் ஞான தேவர்!

3

நெய்கின்ற ஆடை யுள்ளே
நெளிந்தோடும் நூலைப் போலப்
பொய்மாயம் கொண்ட ஞாலப்
புதுவாழ்வின் ஊடே செல்லும்
மெய்ம்மையாம் தத்து வத்தை
மேதினியில் தேடல் ஒன்றே
செய்தவமாம் செய்வீர் என்றார்
சீர்ஞான தேவர் அம்மா!

4

ஒருசெடியில் இருமலர்கள்
பூத்தாலும் மணம்ஒன் றேகாண்!
இருவிளக்கில் சுடர்கள் ஏற்ற
இருசுடரின் ஒளிகள் ஒன்றே!
திருஅருளில் சக்தி என்றும்
திருமகா தேவன் என்றும்
உருக்கண்டு வணங்கிட் டாலும்
தெய்வமொன்றே உணர்வீர் என்றார்.

5

ஆற்றலொடு அவனி தன்னில்
ஆட்சியுடன் வாழ்ந்திட் டாலும்
கூற்றுவனால் சாவு வந்தால்
கோலவுடல் பஞ்ச பூத
மாற்றுருவில் மறைந்தே ஏகும்
நிலையாமைப் பண்பை எண்ணிப்
போற்றிடுவீர் தெய்வம் தன்னை
புகழ்பாடித் தொழுவீர் என்றார்.

குறிப்பு :-

ஞானதேவர் மகாராட்டிரமாநிலம் தந்த ஞானியாவார்; இவர் (கி. பி. 1275—1296) பதின்மூன்றும் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவர் பகவத் கீதைக்குக் கவிதையாலே விளக்க உரை செய்தார். அந்த நூலின் பெயர் ''ஞானேசுவரி'' என்பதாகும்.

நாமதேவர்

1

சொல்லதனுல் நல்லிசையை இசைக்க உள்ளம்
சுவைஉணர்வின் தன்மயமாய்ச் சொக்கு மாபோல்

கல்லுருவில் சிற்பிதந்த கடவுள் தன்னைக்
கண்டுருகக் காதலருள் சுரப்ப தேபோல்

நற்றெய்வம் நாரணர்தம் நாமம் சொல்லிப்
பரப்பியதால் நாமதேவர் ஆனுர் போலும்;

நல்நிலத்தில் பத்தியுணர் வூட்டும் நாதர்
நல்மராத்தி தந்திட்ட ஞானி போலும்!

2

மனமென்னும் சந்தனமாம் மரத்தின் மீது
மாஅரவாம் ஆணவந்தான் சுற்றி நிற்கும்;

சினமென்றும் ஆசையென்றும் பேர்கள் பெற்றுச்
சீரழிக்கும் பேய்ப்படைகள் பற்றி நிற்கும்;

அனலுருவில் காமந்தான் நாவை நீட்டி
அரும்புகளாம் ஐம்புலனைத் தீண்டி நிற்கும்;

தினமும்நீர் அஞ்சுவதேன்? திருமால் நாமம்
தெளிந்துரைப்பீர்! அத்துணையும் அழியும் மாலோ!

3

வேதங்கள் நான்கினையும் ஓத வேண்டாம்
விளைநெல்லை அமுதாக்கிப் படைக்க வேண்டாம்

நாதம்சேர் வீணைகளை மீட்ட வேண்டாம்
நல்யாகம், பூசனைகள் நாட வேண்டாம்

காதலொடு நாதனவன் இராமன் பேரைக்
கல்லுருகக் கலந்திங்கு சொல்வீ ராகில்

பாதரசத் தாலிரும்பு பொன்னும் போலப்
பரமன்தாள் பெற்றுய்வீர் என்றூர் தேவர்!

குறிப்பு :

நாம தேவர் மகாராட்டிர மாநிலம் தந்த ஞானி யாவார்; இவர் (கி. பி. 1270-1350) பதின்மூன்றும் நூற்றுண்டில் வாழ்ந்தவர்; கவிஞருமாவார். இவர் ''அபங்'' என்ற சந்தக் கவிதை முறையைத் தோற்று வித்தவர். இவர்தம் பாடல்கள் 'கிரந்தமாலா' என்னும் சீக்கிய மந்திரப் பாடல்களின் தொகுப்பு நூலில் சேர்க்கப் பட்டுள்ளன.

ஏகநாதர்

1

ஒருமுறை நாம் மரக்கி ளையை
அரிந்தாலும், மரம்வ ளர்ந்து
பெருநிழலைத் தருமாப் போலத்
தீயோராம் கயவர் சில்லோர்
திருவுடம்பில் எச்சல் தன்னை
உமிழ்ந்தாலும் சினமே கொள்ளாப்
பெரியவரே ஞானி என்றார்
பெருஞ்ஞானி ஏக நாதர்!

2

தண்கடலில் வாழ்மீ லங்கு
தண்கடலில் இருக்கு மாபோல்
மண்ணுலகில் காட்டை ஏகி
மாதவங்கள் செய்ய வேண்டாம்;
மண்ணுலக இல்ல றத்தே
வாழ்ந்திங்கு இறைபே ரின்பத்
தண்ணருளைப் பெறலாம் என்றார்
தவயோகி ஏக நாதர்!

ஆசையிலா வாழ்வு கொள்ளல்,
அரும்பொருளை விலக்கிக் கொள்ளல்,

பாசமிலா உள்ளம், தொண்டு
பணிவுடைமை, அன்பு கொள்ளல்,

நேசமொடு கீதை ஆய்ந்து
நித்தமுமே தியானம் கொள்ளல்,

ஈசனுக்கே அடிமை யாதல்
இவைமொழிந்தார் ஏக நாதர்!

குறிப்பு :

ஏகநாதர் மகாராட்டிர மாநிலம் தந்த ஞானி யாவார். இவர் (கி. பி. 1533 – 1599) 16ஆம் நூற்றுண்டில் வாழ்ந்தவர்.

இறைவன் மீது காதல் கொண்ட பத்தியானது இவ்வுலக மக்களுக்குச் செய்யும் தொண்டாக மலர வேண்டும் என்பதே இவர் தம் சிறப்புக் கொள்கை.

இவருக்கு அடிப்படைநூல் 'பாகவதம்' ஆகும்.

துக்காராம்

1

சாதியை முன்னே வைத்துச்
சடங்கினைப் போற்றும் நாளில்

நீதியை நாட்டு தற்கு
நிமிர்ந்திட்டார் துக்கா ராம்காண்;

தீதிலாக் கதிரை ஒப்ப
''வரகரித்'' திட்டம் தந்தார்;

கோதிலாப் 'பஜனை' யாலே
வழிபாட்டைக் கொள்க என்றார்.

2

கரும்பினை விற்ப தற்குக்
காலையில் எழுந்து சென்றே

விரும்பிய எளிய ருக்கே
விலையின்றித் தந்த வள்ளல்;

அரும்பிய ஆசை யெல்லாம்
விட்டல்சே வடியில் வைத்துப்

பெரும்புகழ்ப் பாடல் யாத்த
பெருங்கவி துக்கா ராமே!

அன்பிறல் நாமம் சொல்லி
ஆண்டவன் உறவை ஏற்கும்

இன்புசேர் நெறியாம் பத்தி
இயக்கத்தை இயக்கும் பெம்மான்;

மன்பதை மக்க ளுக்கே
மராத்தியர் தேயம் தந்த

நன்முனி துக்கா ராமின்
நற்பணி மலேவி ளக்கே!

குறிப்பு :-

துக்காராம் மகாராட்டிர மாநிலம் தந்த ஞானி யாவார். இவர் (கி. பி. 1608 — 1650) 17 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்.

இவர் 'வரகரி' என்னும் சமயப் பிரிவைத் தோற்று வித்தார். இது பிராமணர்களால் வகுக்கப்பட்ட வைதீக முறையை எதிர்த்து எழுந்த பிரிவு; இப்பிரிவு விட்டல் பெருமானை வழிபடு கடவுளாகக் கொண்டது; வழிபாட்டு முறைகள் எளிமை கொண்டவை. இவர் வழிபாட்டில் ''பஜன்'' முறையை மேற்கொண்டார். அது சாதி வேறுபாடற்ற கூட்டு வழி பாடாகும்.

ஆந்திர மாநிலம்

நிம்பர்க்கர்

1

ஆகமத்தைப் படித்திட் டாலும்
வேதத்தில் ஆழ்ந்திட் டாலும்

தேகமதை வருத்திட் டாலும்
திருவருளோ பிறப்ப தில்லை!

மோகமுறக் கண்ணன் நாம
ஆழியிலே மூழ்கி னோரே

பாகவத ஞானி ஆவார்
நிம்பர்க்கர் பகர்ந்த ஞானம்!

2

கருங்கடலில் அலைகள் தோன்றும்;
காண்பார்தம் கண்ணுக் காங்கே

பெருங்கடலும் அலையும் வேருய்ப்
பிரிந்திங்கு இரண்டாம் போலப்

பெருங்கமலக் கண்ண னேடு
பேருயிர்கள் நிலையும் அஃதே!

தரும்மயக்கம் பேதம் நீங்கச்
சித்திக்கும் ஞானம் என்ருர்!

குறிப்பு :

நிம்பர்க்கர் ஆந்திரமாநிலம் தந்த ஞானியாவார்; இவர் (கி. பி. 1107–1137) பன்னிரண்டாம் நூற்ருண்

டில் வாழ்ந்தவர்.

இவர்தம் சித்தாந்தம் துவைதா துவைத சித்தாந்தம் என்பதாகும். ஆன்மாக்களும், உலகமும், பிரம்மத்தினின்றும் வேருனவை; எனினும் அதனேடு ஒன்றியும் நிற்கும். கடலும், அதன் அலேயும் போன்ற நிலே. இந்தப் பேத அபேத- நிலேயை உணர்தலே இச்சித்தாந்தமாகும்.

இவர்தம் வழிபடுகடவுள் இராதாகிருட்டிணர் ஆவார்.

வல்லபர்

1

வையம் கண்ட சமயங்கள்
வடித்துத் தந்த பூசையினை
மெய்ம்மை யாகச் செய்தாலும்
மெய்யன் அருள்தான் கூடிடுமோ?
துய்ய ஆவி மனத்தோடு
தோன்றாத் துணையாம் மாலிடத்தே
உய்யப் படைத்தால் அருள்பெறலாம்
உரைத்தார் ஞானி வல்லபரே!

2

காதல் அன்பைப் பெண்ணின்பால்
கலந்த உணர்வில் வைப்பதேபோல்
நாத இன்ப உணர்வெல்லாம்
நனைந்து உயிரில் கலப்பதேபோல்
வேதம் போற்றும் மாதவன்பால்
விளையும் பத்தி சேர்ந்துவிடில்
நாதன் தாமோ தரன்அருளை
நன்கு பெறலாம் எனமொழிந்தார்

3

சித்தம் மேவும் சத்தியமும்
சேர்ந்த அழகின் இன்பமுதும்
புத்தி அடங்கத் தேடிடவே
பூக்கும் ஞானப் பேரறிவும்

இத்த லத்தின் உண்மைகளே!
மாயை இல்லை அறிகவென்றூர்;

பத்தி வழியில் கேசவனைப்
பணிக வென்றூர் வல்லபரே!

குறிப்பு:

வல்லபர் ஆந்திரமாநிலம் தந்த ஞானியாவார்; இவர் (கி. பி. 1472-1531) பதினைந்தாம் நூற்றுண்டில் வாழ்ந்தவர்.

இவருடைய சித்தாந்தம் சுத்தாத்துவைத வேதாந்தம் ஆகும். உண்மை, அறிவு, இன்பம் ஆகியன சேர்ந்ததொரு வடிவே கிருட்டிணருடைய வடிவாகும். அவரே பரப்பிரம்மம். அவரைப் பத்தி வழி வணங்குதலே அவரை அடையும் வழியாகும். மற்ற சமயங்கள் சொல்லுவதுபோல் ''மாயை'' என்ற ஒன்று இல்லை. உலக இயற்கை, தானே வினைகளைத் தந்து செயலாக்கும் என்று இச் சித்தாந்தம் கூறும்.

கருநாடக மாநிலம்

மத்துவர்

1

நாதத்தை உள்ளடக்கி நான்மறையாய்
நானிலத்தில் ஒலிக்கும் வேத

நாதத்தின் உட்பொருளை நன்குணர்ந்து
புதுநெறியை வகுக்க வந்தோன்;

போதத்தன்; உடுப்பியெனும் புத்தூரில்
பிறப்பெடுத்த புனித ஞான

ஆதித்தன்; ஆனந்த தீர்த்தனெனும்
அறிவன்தாள் வணங்கு வோமே!

2

அலகில்லா விளையாட்டால் அவனிதனில்
அருள்பொழியும் உண்மைத் தேவும்,

உலகமதில் உதிக்குமுயிர் அத்துணையும்,
இவ்வுலகும் நிலையாம் என்றும்,

நிலவுலகில் கண்ணனையே காதலிப்பார்
நிலைஇன்பம் தேர்வர் என்றும்,

தலையாய 'துவைதமெனும்' நெறியுரைத்த
மத்துவர்தம் தலைமை வாழ்க!

3

விரிபுனலில் படிந்திருக்கும் பாசியெல்லாம்
கைபடவே விலகல் போல,

விரிமனத்தில் இறைஉருவை நினைந்தெண்ணி
விழைந்தழுது தொழுப வர்க்கே

இருநிலத்தில் மாயையெனும் படர்பாச
இடரகன்று ஞானம் தோன்றும்

திருநெறியை உரைத்தமுனி வாசுதேவ
மத்துவர்தம் திருப்பேர் வாழ்க!

குறிப்பு :-

மத்துவாச்சாரியார் கருநாடகம்தந்த ஞானியாவார். இவர் 12ஆம் நூற்றுண்டில் வாழ்ந்தவர்: ஆனந்த தீர்த்தர், வாசுதேவர் என்னும் பெயர்களைப் பெற்றவர். இவர் கண்ட நெறி ''துவைதம்'' எனப்படும். துவைதம் என்ற சொல்லுக்கு 'இரண்டு' என்பது பொருள். சத்தியமே பிரம்மம் என்றும், அப்பிரம்மம் நிலைத்த தன்மையது என்றும், அதுபோல ஆன்மாக்கள், காலம், இவ்வுலகம் எல்லாமும் நிலைத்த தன்மை உடையன என்றும், ஆகஇவ்விரு பிரிவுகளும் தனித்தனி நிலையில் உள்ளன என்று இத் துவைதமதம் கூறும். பிரம்மம் ஆகிய செம்பொருள் உயர்ந்தது; அதன் கட்டுப் பாட்டில் ஆனால் சுதந்திரமாக, இவ்வுலகம் முதலியன இயங்க வல்லன. பரப்பிரம்மம் நாராயணனே ஆவார்; அவரைத் தியானம் மூலம் அறிந்தால் ஞானம் பெற்று அவனை அடையலாம் என்பது துவைத மதத்தின் சாரம்.

பசவண்ணர்

1

சமயத்தைக் கேடயமாய் ஆக்கிக் கொண்டு
சாத்திரத்தைச் சடங்குகளை எற்பச் சொல்லி

அமைப்பொன்றால் சாதிகளை உயர்த்திக் காட்டும்
சதிகாரர், சுயநலத்தார் உலகி னுக்கே

சுமையாவார் கொள்கைகள் சுடரில் மாய,
இலிங்காய தம்எனுமோர் சங்கம் தோற்றிச்

சமைத்திட்டார் பசவண்ணர்; மக்கள் பேண
ஒருதெய்வ வணக்கத்தைச் சாற்றும் ஞானி!

2

காணுகின்ற காட்சியெலாம் சிவனே என்றும்
கருதுகின்ற உணர்வெல்லாம் சிவனே என்றும்

பேணுகின்ற மந்திரமாம் ஐந்தெ ழுத்தைப்
பெய்மழைபோல் இடையறாது செபிக்க என்றும்

வேணுகுழல் இசைக்கின்ற இசையும் ஈசன்
வேணிபுகழ் பாடிவரும் நாதம் என்றும்

ஆண்டவன்தாள் மறவாத வீர சைவர்
பசவண்ணர் பகர்ந்திட்டார்; மறைகள் அம்மா!

3

காலத்தைக் காட்டுகின்ற கருவி தன்னைக்
கையதனில் கட்டிவைத்துக் காண்ப தேபோல்,

ஞாலத்தைப் படைத்திங்கு நடத்திச் செல்லும்
நாதனுரு சிவவடிவை மனித ரெல்லாம்

கோலமுறத் திருவுடலில் நிலையாய் வைத்துக்
கும்பிடுதல் வாலறிவை உணர்தற் கேற்ற

சாலேகம் ஆகுமெனப் பசவண் ணர்தாம்
சாற்றினர் கன்னடத்தின் சைவச் சித்தர்!

குறிப்பு :

பசவண்ணர் கருநாடக மாநிலம் தந்த ஞானி யாவார்; இவர் (கி. பி. 1125-1165) பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவர் அமைச்சர், கவிஞர், ஞானியாவார். இவர் இலிங்காயத சங்கத்தைத் தோற்று வித்தார். இச்சங்கத்தின் நெறிகள், சிவன் ஒருவனே தெய்வம் என்பதும், சிவனை அடையப் பத்திமார்க்கமே எளிய வழி என்பதும், சாதி சடங்கு முதலிய மூடப்பழக் கத்தை எதிர்த்து மக்கள் நலனைப் பேணவேண்டும் என்பதும், எல்லா உயிர்களிடத்தும் அன்பு கொண்டு தொண்டு செய்ய வேண்டும் என்பதும் ஆகும்.

கேரள மாநிலம்

சங்கரர்

1

காவினில் பூத்துக் கலைசிவம் உணர்த்தும்
கடிமலர்க் கொன்றையே போல
நாவினில் பிறந்து நானிலம் ஆளும்
நான்மறை நாதமே போல,
பூவினில் உயிர்க்குப் புலமையைப் புகட்டப்
புகழுடைக் காலடி உதித்தோன்;
பாவினில் துதிகள் படைத்திடும் ஆதி
சங்கரன் பதமலர் தொழுவாம்!

2

எழுசுடர் ஒன்றில் ஏற்றிடும் சுடர்கள்
எல்லாமும் ஒன்றெனல் போல
எழுமுயிர் உலகும் உயிர்களும் மற்றும்
பிரம்மத்தின் இயலென இயம்ப
விழுமிய நெறியாம் ''அத்துவித'' நெறியை
வேதத்தின் துணையுடன் கண்டோன்
தொழுமதம் ஆருய்த் தொகுத்தநல் யோகி
சங்கரன் துணையடி துணையே!

3

சத்திய நெறியைச் சார்ந்திடக் கீதை
சாற்றிடும் வழியினைக் காட்டி
பத்தியாய் மடங்கள் பலப்பல நாட்டிப்
பயன்தரு விரிவுரை பகர்ந்தோன்;
நித்திய கலைக்கு நாயக பீடம்
நீரகம் பொலிவுற அமர்ந்தோன்;
உத்தம ஞானக் குருவனும் ஆதி
சங்கரன் உயர்புகழ் போற்றி!

4

ஐம்புலன் வென்றே அருந்தவம் ஆற்றி
ஆன்மிகக் கலைதரு சித்தன்;
அம்புவி தன்னில் புறமதம் வென்றும்
அறநெறி நிறுத்திய குருவன்;
நம்பனை நமச்சி வாயத்தை எண்ணி
நாளெலாம் உருகிட நூல்கள்
செம்புலம் வாழச் செப்பிய ஆதி
சங்கரச் சீலனை நினைவாம்.

குறிப்பு :-

சங்கரர் கேரளமாநிலம் தந்த ஞானியாவார். இவர் எட்டாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர். இவர் காணுபத்தியம், கௌமாரம், சைவம், சாக்தம், சௌரம், வைணவம் ஆகிய ஆறு சமயங்களையும் ஒன்று சேர்த்து சண்மத ஸ்தாபகம் செய்து ஓர் ஆலயத்திற்குள் கொண்டு வந்த பெரும் புகழ் இவரைச் சேர்ந்தது. இவர் சர்வஞ்ஞ பீடம் ஏறிச் சிறப்புப் பெற்றவர். இவர் கண்ட நெறி ''அத்துவைதம்'' எனப்படும். அத்துவைதம் என்பது இரண்டற்றது என்பதாகும். அத்துவைத நெறியில் பிரம்மம் என்பது இரண்டற்ற பரம் பொருளாகும்; அதற்கு வேருக உலகம், உயிர் என்பதில்லை; எல்லாம் பிரம்மத்தினின்று தோன்றியனவே; மாயையின் காரியத்தால் வேருகத் தோன்றுகின்றன; பிரம்மமும் ஆன்மாவும் ஒன்றே என்பது அத்துவைத நெறியாகும்.

தமிழ்நாடு மாநிலம்

திருமூலர்

1

துன்பம், கவலை தமைப்போக்கித்
    தொடரும் வினைகள் தமைமாய்த்தே

அன்பு வழியில் இறைவனையே
    அடையும் வகையாம் ஆகமத்தை

என்பும் உருகும் மந்திரமாய்
    எழுதித் தந்தார் கவியுருவில்

தென்னன் தமிழ்க்கோர் மூலனவன்
    தேவன் மூலன் தாள்பணிவோம்!

2

கனிகள் வாழ்வில் அழிவதுபோல்
    கவினுர் இளமை மாறிவிடும்;

பனியின் மூட்டம் அகல்வதுபோல்
    பாரில் வாழ்வின் நிலைமாறும்;

முனிவே, ஆசை, காமமெலாம்
    முயன்றே அடக்கிச் சிவனுர்பால்

கனியும் காதல் வைக்க எனக்
    கலையாய் உரைத்தார் ஞானமுனி!

3

நத்தும் பெண்ணில் ஐம்புலனும்
　　நாடி உணர்வால் ஒடுங்குதல்போல்

சித்தம் ஒன்றப் புலனறிவைச்
　　சிவனார் தாளில் செலுத்திவிடில்

புத்தம் புதிய ஒளிபிறந்து
　　புகழ்பே ரின்பம் பூக்குமெனச்

சித்த யோக மறைபுகன்றார்
　　சித்தன் மூல நாதனம்மா!

குறிப்பு :

திருமூலர் தமிழ்நாடு மாநிலம் தந்த ஞானியாவார்; இவர் காலம் அறிய வொண்ணாதது; ஆனால் இவர் செய்த திருமந்திரம் எழுந்தது திருஞான சம்பந்தர் காலத்திற்கு முற்பட்ட காலத்திலாகும்.

சைவத் திரு முறை பன்னிரண்டினுள் திருமந்திரம் 10 ஆம் திருமுறையாகும்.

இவர் சைவ ஆகமத்தைப் பெரிதும் வலியுறுத்தித் தம் பாடல்கள் மூலம் பரப்பியுள்ளார். இவர்தம் மூலக் கருத்து ''அன்பே சிவம்'' என்பதாகும். முப்பொருள் உண்மைகளையும், திருநீறு, ஐந்தெழுத்து உண்மை களையும், யோக நெறிகளையும், அற முதற் பொருள் களையும், வாழ்வியல் பொருள்களையும், நன்கு விளக்கிக் கூறியுள்ளார்.

சிவவாக்கியர்

1

நம்பிக்கை வைத்தே ஈசன்
நற்பதம் நாடு தற்குச்

செம்மையாய்ச் சமயம் சேர்த்தார்;
சமயத்தின் வேர்சி தைந்து

வெம்பகை மூண்ட நாளில்
விரிகதிர் ஒப்பப் பாடல்

அம்புவி வாழ யாத்தார்
அருள்சிவ வாக்கி யர்காண்!

2

அரியென்றும் இலிங்க மென்றும்
ஆற்றலுரு சக்தி யென்றும்

பெரியதாய் உருவம் கண்டு
பேணுவார் பூசை தன்னை

உரியவழி இல்லை என்றார்;
உள்வளர் யோகத் தாலே

திருவினை எண்ண ஆங்கு
இறைநிலை தெளியும் என்றார்!

3

பாலிலே திரளு கின்ற
பாலுரு ஆடை போல

மாலையில் மலரும் பூக்கள்
மணத்தினைத் தருதல் போல,

மாலற அஞ்செ ழுத்தோ
மனத்தொடு புணர ஆங்கே

மூலமாய்த் தோன்றும் தெய்வ
மூர்த்தியை வணங்கு கென்றார்!

குறிப்பு :

சிவவாக்கியர் தமிழ்நாடு தந்த ஞானியாவார்; சித்தரும் யோகியுமாவார். சிவவாக்கியர் வரலாறு பற்றிய செய்தி ஒன்றும் கிடைக்கவில்லை. இவர் காலத்தால் திருமூலருக்குச் சற்றுப்பின் வாழ்ந்தவர் எனக் கொள்ளலாம். இவர்தம் இயற்பெயர் தெரியவில்லை. இவர், 'சிவவாக்கியம்' எனப் பெயரிய நூலைச் செய்தமையால், 'சிவவாக்கியர்' எனப் பெயர் பெற்றார். இவர் தமிழ்ச் சித்தர் குழுக்குள் தலையாயவர். இவர் உருவ வழிபாட்டையும், சடங்கு, பூசை முதலியவற்றையும் எதிர்த்தவர். இவர், சிவனே பரம்பொருள் என்பர்; இறைவன், ஒவ்வொரு ஆன்மாவின் உள்ளத்திலும் ஞானமயமாக ஒளிவீசுகிறான்; நம் அகத்துறையும் இறைவனை யோக வழியில் ஆராதித்தால் ஞானம் தானே பிறக்கும்; அவ்வகை ஞானம் இறையை நமக்கு உணர்த்தும் என்பதுதான் இவர்தம் சித்தாந்தக் கொள்கையாகும்.

காரைக்காலம்மையார்

1

இன்ப வனப்புடம்பை
மாயையென எற்றினுள்
துன்ப எலும்புடம்புத்
தோகையவள் — இன்பமென
அம்மான் சிவனடிக்கே
ஆளானுள் காரைக்கால்
அம்மையாம் ஞான அனல்!

2

கங்கை மணுளன்
கழலடியை உள்ளுருகிப்
பொங்கும் புதுக்காதல்
புத்துணர்வை — மங்காமல்
ஆன்ற தமிழ்மறையாம்
அற்புத அந்தாதி
ஈன்றசீர் அம்மையை ஏத்து!

3

பச்சையும் செஞ்சிவப்பும்
பாங்காய் மலரிணைய
இச்சையால் கட்டிய
இண்டைபோல் – நச்சியே
அம்மை, இரட்டை
மணிமாலை ஆய்ந்தளித்தாள்
செம்மை திருப்பாதம் செப்பு!

குறிப்பு :

காரைக் காலம்மையார் தமிழ்நாடு மாநிலம் தந்த ஞானியாவார். இவர் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்.

இவர் பாடிச் செய்த நூல்கள் அற்புதத் திருவந்தாதி, திருஇரட்டை மணிமாலை, மூத்த திருப்பதிகம், திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் என்பவையாகும். சைவத்திருமுறை பன்னிரண்டினுள் இவர் தம் பதிகங்கள் 11 ஆம் திரு முறையில் தொகுக்கப் பட்டுள்ளன. முதன் முதலில் பத்துப் பாடல்களைப் பாடி அதற்குப் ''பதிகம்'' என்ற பெயரைத் தோற்று வித்துப் பெருமை கொண்டவர் இவர் என்று சொல்வர்.

இவர், கொடிய துன்பம் சாடுங் காலத்தும், இறைவன்பால் அசையாத நம்பிக்கை வைக்க வேண்டுமென்ற ஞான நெறியை வலியுறுத்திச் சொன்னவர்.

திருஞானசம்பந்தர்

1

கண்கலங்கி அழுதலுமே கலையரசர்
 கருணையினால் ஞானப் பாலும்
பண்குலுங்கும் இசைத்தமிழும் படிக்காசும்
 படைத்தருளப் பெற்ற வன்காண்;
மண்துலங்கச் சைவத்தின் மணந்துலங்க
 வல்லமணர் வலிய டக்கி
எண்விளங்க மாலையணி இசைஞான
 சம்பந்தன் இருதாள் போற்றி!

2

செந்தமிழில் பண்ணெழுகச் சிவனார்தம்
 திருத்தலங்கள் பலவும் பாடிப்
பந்தமற அருள்நோக்கில் பரஞ்சுடரின்
 பேரன்பைப் பரிசாய்ப் பெற்றோன்;
மந்திரமாம் கவிமொழியில் மண்ணகத்தே
 உயிர்தழைக்கப் பாடும் ஞானி!
வந்தபெரும் தமிழ்விரகன் சம்பந்தன்
 தாளிணையே வணங்கி வாழ்வாம்!

குறிப்பு :

திருஞானசம்பந்தர் தமிழ்நாடு மாநிலம் தந்த ஞானி யாவார். இவர் கி. பி. ஏழாம் நூற்றுண்டில் வாழ்ந்தவர். சைவத் திருமுறைகள் பன்னிரண்டினுள் முதல் மூன்று திருமுறைகள் இவர் பாடிய தேவாரமாகும். முன்பு

இவருடைய பாடல்களைத் 'திருக்கடைக்காப்பு' என்று கூறுவர்.

இவர் இறைவனைப் புத்திர நெறியில் நின்று வழி பட்டவர். இவர், பத்தியே இறையை அடையும் வழி எனக் கூறுவர்; தலங்கள் தோறும் சென்று, பதிகம் பாடி இறையைப் பரப்பியவர்.

சைவ சித்தாந்த உண்மைகளான பதி பசு-பாசம் என்னும் 'முப்பொருளின் இலக்கணங்களைத் தம் பாடல் களில் விளங்கச் செய்துள்ளார்; இவருடைய பாடல் கள் சைவசித்தாந்தக் கோட்பாடுகள் உருவாவதற்குக் கருவாக விளங்குகின்றன.

திருநாவுக்கரசர்

1

அம்பலம்சேர் ஆடரசன் உருமுதலாய்
அனைத்துருவும் நினைந்து நாளும்
நம்பனமர் தலந்தோறும் நடந்துசென்றே
சைவத்தின் நலம்வி ளக்கி
உம்பரெலாம் தொழுதேத்தும் ஒளித்தேவால்
'நாவரசே' என்னப் பெற்ற
நம்பியவன் வாகீசன் திருத்தாள்கள்
நாமுய்யப் போற்றி செய்வாம்.

2

அஞ்செழுத்தின் புணைபிடித்தே உழவாரப்
படையேந்தி அரன்தன் நாமம்
நெஞ்சுநிறை 'சிவாயநம' எனப்பயின்று
நினைந்தழுது மேனி யெல்லாம்
நஞ்சுமிழும் அரவணிந்தான் திருநீற்றின்
நலம்விளங்க அசைந்த சைந்தே
கொஞ்சுதமிழ்ப் பண்ணிசைத்துக் குழைந்துருகும்
அப்பரிணை அடியே போற்றி.

குறிப்பு :-

திருநாவுக்கரசர் தமிழ்நாடு மாநிலம் தந்த ஞானியாவார். இவர் கி. பி ஏழாம் நூற்றுண்டில் வாழ்ந்தவர். இவர் திருஞான சம்பந்தரோடு ஒத்த காலத்தில் வாழ்ந்தவர்; திருஞானசம்பந்தரால், ''அப்பர்'' என

அன்போடு அழைக்கப் பெற்றவர்.

சைவத்திருமுறை பன்னிரண்டினுள் 4, 5, 6,— திருமுறைகளைப் பாடியவர். இவர்தம் பாடல்கள் தேவாரம் என வழங்கப் பெறும். இவர் தலங்கள் தோறும் சென்று பதிகம் பாடித் தொண்டுபல செய்தவர். நாயக நாயகி, நிலையில் நின்று இறையை மனமுருகப் பாடியவர். இவர், சைவசித்தாந்தக் கோட்பாடுகளான முப்பொருள் உண்மைகளைத் தம்பாடல்களில் விளக்க முறச் செய்தார்; இறைவனை அடைய அன்பு வழியைப் போதித்தார்; மக்கள் இறை உணர்வோடு தொண்டுபல செய்ய வேண்டும் என்று வலியுறுத்திச் சொன்னார்; மேலும் தாமே பணி செய்து காட்டினார்.

திரு சுந்தரர்

1

வேதத்தின் உட்பொருளாய் விளங்கிஅவ்
வேதங்கள் பரவ நின்ற

பாதத்தால் நடந்தேகிப் பரவையர்பால்
தூதுரைத்தோன் அருளைப் பெற்றேன்;

நாதத்தின் ஒலிவழியே நாயகனைத்
தோழனுமாய்க் கண்ட யோகி

போதத்தன் திருநாவல் சுந்தரன்தன்
பொற்றாளைப் போற்றி செய்வாம்.

2

சித்தமெலாம் இன்புருகச் சிவனார்தம்
திருத்தலங்கள் தேடிச் சென்றே

அத்தனையே பித்தனென அரற்றியவன்
அரும்பொருள்கள் பலவும் பெற்றேன்;

வித்தகனாய்ச் சேரலன்தன் நட்பினோடு
வேணியனைப் பாடும் தொண்டன்

உத்தமனாம் சுந்தரரின் திருவடியை
உள்ளத்தே உள்ளி வாழ்வாம்.

குறிப்பு :

திரு சுந்தரர் தமிழ்நாடு மாநிலம் தந்த ஞானி யாவார்; இவர் எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்.

சைவத் திருமுறை பன்னிரண்டினுள், இவர் ஏழாம் திருமுறையைப் பாடியவர். இவர் தம் தேவாரப் பாடல்களுக்குத் ''திருப்பாட்டு'' என முன்பு வழங்கப் பெற்றது. இவர் தலங்கள் தோறும் சென்று பதிகங்கள் பாடி இறையருளைப் பெற்றவர். இவர், சிவனோடு சிவனடியார்களையும் போற்றும் வகையில், 'திருத்தொண்டத் தொகை' என்ற பதிகம் பாடிச் சிறப்பித்துள்ளார். இவர் இறைவனைத் தோழனாகவும், துணைவனாகவும் கொண்டு, பாடிப் பரவியவர்.

இவர் சைவசித்தாந்தக் கோட்பாடுகளான, முப் பொருள் உண்மைகளைத் தம் பாடல்களில் விளங்கச் செய்துள்ளார்; இவர் தம் நெறி யோக நெறியாகும்; அவ்வழி நின்று இறையை அடைய முயல்க எனக் கூறியுள்ளார்.

ஐயடிகள் காடவர் கோன்

1

வையம் நலம்காண
வாழ்காஞ்சி ஆட்சியினன்
செய்ய சிவமதத்தின்
சீர்விளங்க — ஐயடிகள்
வெண்ணீ றணிந்தானை
வேணியனைத் தாள்பணிந்தார்
வெண்பா மலர்சிந்தும் வேந்து.

2

எண்ணத் தகழியிலே
இன்பன்பாம் நெய்பெய்து
கண்ணுதலைப் போற்றிக்
கவித்திரியில் — வெண்பாவாம்
நல்விளக் கேற்றினன்
நல்வேந்தன் காடவன்பேர்
சொல்லிநீ நெஞ்சே தொழு!

3

பூத்த மலரின்
புதுமணத்தைத் தானேந்திச்
சேர்த்துத் தருகின்ற
தென்றலாய்க் — கூத்தன் வாழ்
தில்லைமுதல் கோயிலெலாம்
சென்றே அருள்சேர்த்த
பல்லவன்பா நெஞ்சே படி!

குறிப்பு :—

ஐயடிகள் காடவர் கோன் தமிழ் நாடு மாநிலம் தந்த ஞானியாவார்; இவர் கி. பி. எட்டாம் நூற்றுண்டில் வாழ்ந்தவர். இவர் காடவர் என்னும் பல்லவ அரச மரபினர். இவரும் இவருடைய வழி முறையினரும் காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு அரசு புரிந்திருந்தனர் என்பர். இவர், சிவனுறையும் திருத்தலங்கள் தோறும் சென்று இறைவனைப் பாடிப் பரவியவர். ஒவ்வோர் ஊரிலும் ஒவ்வொரு வெண்பாப் பாடுதலை மேற்கொண்டவர். வெண்பாப் பாடல்கள் முழுவதும் கிடைக்கவில்லை; இருபத்து நான்கு வெண்பாக்களே கிடைத்தன. இவர் செய்த நூலுக்கு ''திருக்கோயில் திருவெண்பா'' என்று பெயர் பெறும், இந்தநூல், சைவத்திரு முறை பன்னிரண்டினுள் 11ஆம் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ளது.

இவர், தலங்கள் தோறும் சென்று சிவனைக் கண்டு வணங்கி, சிவானந்த அனுபூதியைப் பெற்றவர். ஒவ்வொரு மனிதனும் தன் பிறவித் துயர் நீங்க, இறைவன் திருவுருவங்களை நினைந்து வணங்குக என்றும், இவ்வுலகில் எப்பொருளும் நிலையானது அன்று என்றும், சிவன் ஒருவனே நிலையான நிறைந்த பொருள் என்றும், வலியுறுத்திக் கூறுவர்.

நம்மாழ்வார்

1

தன்னலத்தைக் கருதாத
தாயனையன்; உலகுயிர்கள்
தழைத்து வாழ

மன்னுலகில் புளியமர
மாமனையில் வீற்றிருந்தே
யோகு செய்தோன்;

நன்னலமாம் வைணவத்தை
நல்லதமிழ் ஆயிரமாய்
வடித்துத் தந்தோன்;

பொன்னரங்கன் பொன்னடிக்கே
பதித்தநெஞ்சன்; அருள்மாறன்
பாதம் பற்று!

2

ஒன்றேதான் மெய்ப்பொருள்காண்
அப்பொருள்தான் உயிருக்குள்
உயிரே யாகி

நன்றேதான் வினையதுவாய்
அவ்வினையின் பயனதுவாய்
நடத்திச் செல்லும்,

கன்றேபோல் கலந்தன்பால்
நாரணன்தாள் அடைக்கலமாய்
நிற்பீ ராகில்

வென்றேவெவ் வினையாள்வீர்
என்றுரைத்தார் நம்மாழ்வார்
ஞானச் சங்கு!

3

மன்னுயிர்கள் காதலிகள்;
மாமாயன் காதலன்காண்;
என்ப தற்கோ,

இன்பமுத மாறனவன்
ஏந்தலவன் துழாய்மாலை
உவந்து சூடும்
பொன்னிநதி அரங்கனுக்கே
புலனழிந்து பித்தாகிக்
காத லானாள்;
தென்குருகூர்ப் பராங்குசநல்
நாயகியோ திருக்காதல்
சின்னம் அம்மா!

குறிப்பு :-

நம்மாழ்வார் தமிழ் நாடு மாநிலம் தந்த ஞானியாவார். இவர் எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்.

இவருக்குச் சடகோபன், காரி மாறன், பராங்குசன், குருகைப்பிரான், அருள்மாறன், தென்னரங்கன் பொன்னடி, திருக்குருகூர் நம்பி, திருநாவீறுடைய பிரான் முதலிய பெயர்கள் உண்டு. ஆழ்வார்களுக்குள் தலைமை பெற்றதனால் நம்மாழ்வார் என வழங்கப் பெற்றார்.

இவருடைய அருளிச் செயல்கள், திருவாய் மொழி, திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி முதலியனவாகும். நாயக, நாயகி, நிலையில் நின்று அகப் பொருட்பாடல்கள் பல பாடியுள்ளார்.

இவர்தம் நெறி அடைக்கல நெறியாகும். எவ் விதப் பற்றுமின்றி, இறைவனாகிய திருமாலையே இடையருது நினைந்து, அவன் திருத்தாள்களில் அடைக்கலம் புகுந்தால் இறையருள் கிட்டும் என்பர்.

இறைவனாகிய திருமாலும், ஆன்மாவும் நிலைத்த தன்மை உடையனவாகும். இறைவன், இவ்வுலகில் அறிவுடைப் பொருளாகிய சித்தையும், அறிவில்லாத பொருள்களாகிய அசித்தையும், தன்னுடைய அவயவங்களாகக் கொண்டு, அப்பொருள்களோடு இணைந்து, இயக்கிச் செல்கிறான் என்பது இவர் தம் தத்துவக் கருத்து!

இவர்தம் திருவாய் மொழியிலிருந்தே, உண்மையை உணர்ந்து விசிஷ்டாத்துவைதத்தை இராமநுசர் உருவாக்கினார்.

மாணிக்கவாசகர்

1

திருவிளக்கே! அறியாமை இருளகற்றும்
சித்தாந்த தத்து வத்தைத்
தருவிளக்கே! தவமுடையார் சிந்தையுளும்
புகுந்துவிடும் தன்மு னைப்பின்
கருவகற்றிக் காக்கின்ற கலைவிளக்கே!
மெய்யடியார் காத லிக்கும்
உருவிளக்கே! சிவமுணர்த்தும் மாணிக்க
வாசகப்பேர் உடையாய் போற்றி!

2

அரும்பாகித் தொடுங்காலம் மலரவிழ்ந்து
மணப்பரப்பும் அழகி னைப்போல்,
கரும்பான பாவகையால் கன்மவினை
களைந்தொதுக்கி ஞானம் மேவ,
பெரும்பாவ ஆசையெலாம் பேர்ந்தேக
மனம்மலர்ந்து சிவம ணக்கத்
தரும்பாடல் வாசகத்தேன் அளித்தருளும்
தாமரையாம் தலைவ போற்றி!

3

மண்ணுக்குள் சுண்ணும்புக் கற்களெலாம்
மறைவாக, அழுத்தத் தாலே
விண்ணொளிரும் கதிரொப்ப விளங்குகின்ற
சலவைக்கல் ஆவ தேபோல்
எண்ணங்கள் பற்றற்றுப் பாசமிலா
இன்பமெனும் சிவத்தைக் கூடப்
பண்ணொளிரும் பாவையொடு அம்மானை,
பாடியநற் குருவே போற்றி!

குறிப்பு :

மாணிக்கவாசகர் தமிழ்நாடு மாநிலம் தந்த ஞானி யாவார். இவர் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் முற் பகுதியில் வாழ்ந்தவர். இவர் அமைச்சராகப் பணி புரிந்தவர். இவருக்கு, மணிவாசகர், திருவாதவூரடிகள் முதலிய பெயர்கள் உண்டு.

இவர் எழுதிய நூல்கள் திருவாசகமும், திருக் கோவை யாரும் ஆகும். இதில், மாணிக்கவாசகர் பல திருப்பதிகங்களுக்குச் சென்று பாடிய திருப்பதிகங்களின் தொகுப்பே திருவாசகம் ஆகும். அகப்பொருள் தோயப் பாடிப் பேரின்ப உணர்வை ஊட்டும் நூலே திருக் கோவையார் ஆகும்.

சைவத்திருமுறைகள் பன்னிரண்டினுள், திருவாச கமும், திருக்கோவையாரும் எட்டாம் திருமுறையாக அமைக்கப் பட்டுள்ளன.

சைவசித்தாந்த உண்மைகளை ஆழமாகப் பதியும் வண்ணம் விளங்கச் செய்தவர் மணிவாசகர். நம் உள்ளம், உடல், உயிர் அனைத்தும் இறைவன் உடைமைகள் என்றும், உடைமைப் பொருள், உடை மைக்கு உரியவனாகிய இறைவனிடம் ஒப்படைத்து விட வேண்டும் என்றும் கூறுவர். அதற்கு வழி அவனிடம் அடைக்கலம் கொள்ளுதலே என்பது இவர்தம் மூலக் கருத்தாகும். அதனால், இவர் 'அடைக்கலப்பத்து', என்று ஒரு திருப்பதிகமே பாடியுள்ளார்.

இராமாநுசர்

1

தனிமுதல் வித்தைத் தமிழ் மறைக் கவியைத்
தழைத்திடும் வளமையின் தாயை
நனிமிகு கமலத் திருவொடு பொலியும்
நாதனை மனத்தினில் கொண்டோன்;
புனிதமா மறைக்குப் பொருள் விரி விளக்கப்
புதுவுரை எழுதிய புனிதன்;
இனிய நல் ஞானி இராமாநு சன்தன்
இணையிலாத் திருவடி தொழுவாம்!

2

செந்தமிழ் ஆண்டாள் செப்பிய மொழிகள்
செவிபெறப் பொலிதிரு மாலை
வந்தனை செய்து வாழ்வினை வழங்கி
வைணவம் வளர்த்தமெய்த் தவத்தோன்;
மந்திரப் பொருளை மாநிலம் உய்ய
மதிலமர்ந் துரைத் திடும் வள்ளல்
அந்தமில் புகழான் உடையவர் அடியை
அன்பொடு வழிபடல் அரணே!

3

உலவிடும் உடலை ஆண்டிடும் உயிர்போல்
உயிர், உடல் ஆண்டிடும் தெய்வம்
அலகிலாத் தலைவன் அரங்கனே என்னும்
அறிவினை அளித்திடும் அறிவன்;
பலகலை முனிவன் ; பரம்பொருள் பாதம்
பற்றிடும் அடைக்கல நெறியை
நலமுற உரைத்த நல் எதி ராச
நம்பியின் புகழடி துணையே!

குறிப்பு :

இராமாநுசர் தமிழ் நாடு மாநிலம் தந்த ஞானி யாவார். இவர் (கி. பி. 1017 - 1137) பதினொன்றும் நூற்றுண்டில் வாழ்ந்தவர். இவருக்கு, எதிராசன், உடையவர் முதலிய பெயர்கள் உண்டு.

இவர் திருக் கோட்டி நம்பி என்ற குருவிடம் கேட்ட 'திவ்ய மந்திரப் பொருளை' க் கோயில் மதில் மேல் அமர்ந்து, ஊரறியச் சொன்ன தியாகச் செம்மலாவார்.

இவர் பிரம்மசூத்திரத்திற்கு, உரை செய்தவர், அவ்வுரை ''ஸ்ரீபாஷ்யம்'' எனப்பெயர் பெறும்.

இவர் கண்ட நெறி ''விசிஷ்டாத்துவைத'' நெறியாகும்: இறைவன் சடப்பொருள்களையும், உயிர்களையும் உடலாகக் கொண்டு ஆள்பவன் என்பதும், இறைவன் வேறு, உயிர்கள் வேறு என்பதும் உயிர்களின் மீதுள்ள கருணையினுல் அவன் உயிர்களோடு ஒன்றி யிருந்து, அவ்வுயிர்களுக்கு அந்தமில் பேரின்பத்தைத் தருகிருன் என்பதும் இவர் நெறியின் கோட்பாடுகளாகும். இறைவன்பால் பத்தி கொண்டு, அவனை அடைக்கலமாக (சரணுகதி) அடைவது மிக எளிய வழி என்றும் கூறியுள்ளார்.

பட்டினத்துப் பிள்ளையார்

1

தத்துவம் கண்ட சொற்கள்;
''தான்'' உணர்வு அழிக்கும் சொற்கள்,
நித்திய பூசைக் காக
நிமலனின் புகழைச் சேர்த்துப்
பத்தியை ஊட்டும் சொற்கள்;
பக்குவம் சேரப் பாடும்
சித்தராம் பட்டி னத்தார்
சிந்திய பாக்கள் கோடி!

2

ஒண்சுடர் ஒளியைப் போல
ஒளிர்கலை அழகைப் போல
மண்தரு நன்மை போல
மாபெரும் ஆக மத்தைப்
பண்மலர் ஞானப் பாவாய்ப்
பாடினர் திருவெண் காடர்;
கண்ணுடைச் சைவம் காக்கும்
கருத்துறை படையே யன்றோ!

3

ஒற்றியூர் அரனைச் சேர்ந்தார்;
ஒளிர்பெரு காத லாலே
வெற்றிசேர் கோவை யோடு
விளங்கு-நான் மணிமா லையால்
நெற்றிசேர் கண்ணு டையார்
சிவநெறி நிலைக்கப் பாடும்
பெற்றியார் பட்டி னத்தார்
பெருந்தவக் கொழுந்தே யாவார்.

4

கண்ணொளிச் சோதி என்றும்,
கழுமலக் கோவே என்றும்,
எண்ணிநெஞ் சுருகு வார்தம்
இதயத்தே அமர்ந்து காக்கும்
புண்ணியன் சிவனே என்பார்;
புவியினில் வாழும் நாளில்
பெண்ணினில் பாதி யானைப்
பெரிதும்நீ வழுத்து கென்பார்!

5

அருத்தனை, புகலி யானை
அழகனை, மருதூ ரானை
நிருத்தனை, தில்லை யானை
நித்தமும் நினைந்து நைந்து,
திருத்தலம் பலவும் சுற்றித்
திருவுடைச் சிவமே யான
கருத்துடைப் பட்டி னத்தார்
கழலடி போற்றி செய்வாம்!

குறிப்பு :

பட்டினத்துப் பிள்ளையார் தமிழ்நாடு மாநிலம் தந்த ஞானியாவார். இவர் கி. பி. பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்.

இவர் இயற்றிய நூல்கள், கோயில் நான்மணி மாலை, திருக்கழுமலமும்மணிக்கோவை, திருவிடை மருதூர் மும்மணிக்கோவை திருஏகம்பமுடையார் திருவந்தாதி, திருஒற்றியூர் ஒருபா ஒருபஃது என்பனவாகும்.

சைவத்திருமுறை பன்னிரண்டினுள் இவர்தம் பாடல்கள் பதினோராம் திருமுறையில் சேர்க்கப் பெற்றுள்ளன.

இவர் சைவ சித்தாந்தக் கருத்துக்களையும், அன்பு வழிபாட்டினையும், ஆகமக் கருத்துக்களையும் சுவையூறுமாறு பாடியுள்ளார்.

மெய்கண்டார்

1

மெய்பொலியும் தமிழ்நாட்டில்
 புறச்சமயம் மெலிந்தேகச்

செய்யசிவ சமயத்தின்
 திருவிளங்க உதித்தவன்காண்;

பொய்யிருளின் திரைவிலக்கிப்
 புகழ்த்தமிழின் ஒளிகாட்டும்

மெய்கண்ட திருத்தேவ
 மேதகைதன் கழல்வாழ்க!

2

சிலையதனில் சேர்ந்துறையும்
 அழுக்கெல்லாம் சிதறுதல்போல்

புலனுறையும் பாசமெலாம்
 புகுஞானத் திருவருளால்

நிலைதெரிந்து பசுக்களெலாம்
 நிறைபதியை அடையுமுண்மைக்

கலைபுகன்றான்; சிவஞான
 போதமுரை கவிவாழ்க!

3

சுனைக்குரிய வளமையவன்;
சுடர்க்குரிய வெம்மையவன்;
தனக்குவமை சொல்லவொணுத்
தத்துவனும் சிவபெருமான்
வினைக்குரிய உயிர்களொடு
வேருகிக் கலப்பனெனும்
மனக்கினிய மறைமொழிந்த
மாதவமெய்ஞ் ஞானிவாழ்க!

குறிப்பு:

மெய்கண்டார் தமிழ்நாடு மாநிலம் தந்த ஞானி யாவார். இவர் கி. பி. பதின்மூன்ரும் நூற்ருண்டில் வாழ்ந்தவர். இவர்தம் மாணுக்கர்கள் நாற்பத்தொன்ப தின்மர் என்பர்.

இவர் செய்த நூல் 'சிவஞான போதம்' என்னும் நூலாகும். அது சைவசித்தாந்தத்திற்கு இலக்கண நூலாக அமைந்தது; பன்னிரு சூத்திரங்களைக் கொண் டது. இது மெய்யுணர்வுக் கொள்கை முழுவதையும், அடக்கி எழுந்த நூல்; உயிர்கள் மும்மலங்கள் நீங்கி, இறை இயல்பை உணர்ந்து, இறைவனை அடையும் வழியைக் காட்டும் நூல்; மிகச் சிறப்பாக, சைவசித் தாந்த நெறிக்கே உரியதான, முப்பொருள் தத்துவத்தை விளக்கும் நூல்; உயிர்கள் மும்மலங்களால் சூழப்பட் டுள்ளன. அவை, ஞானம் பெருக, மும்மலங்களாகிய கட்டுக்கள் அகன்று, பதியாகிய இறைவனை அடைந்து உய்யும் வழி கூறும் பதி-பசு-பாசம் என்னும் முப்பொருள் தத்துவ உண்மையை விளக்கிக் காட்டும் நூலாகும்.

அருணகிரிநாதர்

1

மறை முதல் கலைகள் எல்லாம்
மறுகியே தேடி நிற்கும்

நிறைபரம் பொருளைக் கண்டோன்
நினைப்பவர் குறைகள் தீர்க்கும்

மறைமொழி சந்தப் பாவால்
மனத்தமர் முருகன் ஏத்தும்

நிறை அரு ணகிரி நாதன்
மலரடி நினைந்து வாழ்வாம்

2

மதியுறை மாயை நீக்கி
மனத்தினைத் தூய தாக்கிப்

பதியெனக் கந்தை காட்டிப்
பகர்''திருப் புகழி'' னோடு

துதிஅனு பூதி என்னும்
துயரறு நூலைத் தந்த

கதிஅரு ணகிரி நாதன்
கழலடி சென்னி வைப்பாம்.

களிமயில் ஏறிக் காக்கும்
காளையை, குமரன் தன்னை

ஒளிவிடும் வேலை மற்றும்
ஒருதிரு வகுப்பில் காட்டித்

தெளிவுறு ஞானம் சேர்க்கும்
தீந்தமிழ் முனிவன் ஆவன்

அளி அரு ணகிரி நாதன்
அருளடி போற்றி செய்வாம்!

குறிப்பு :

அருணகிரிநாதர் தமிழ் நாடு மாநிலம் தந்த ஞானி யாவார். கி. பி. பதினைந்தாம் நூற்றுண்டில் வாழ்ந்தவர்.

இவர் முருகப் பெருமானை வழிபடு கடவுளாக கொண்டு அருள் பெற்றவர். இவர் முருகன் பேரில் பாடிய சந்தப்பாக்களின் தொகுப்பே ''திருப்புகழ்'' எனப் பெயர் பெறும். இவர் திருவகுப்பு, கந்தரலங்காரம், கந்தரனுபூதி, வேல் விருத்தம், மயில் விருத்தம், முதலிய நூல்களைத் தந்துள்ளார். இவர் சைவ வைணவ சமரச ஞானமிக்கவர்.

ஆசையையும், ஆணவத்தையும், அகற்ற வேண்டுமென்றும், அவ்வாறு அகலப் பெற்றவர் மனத்தில் இறையாகிய முருகன் அமர்ந்து அருள்புரிவான் என்றும், சந்த நலமிக்க பக்திப்பாடல்கள் மூலம் தெளிவுபடுத்தியுள்ளார்.

தாயுமானவர்

1

ஆயபேர் அறங்கள் வாழ
அனைத்திலும் அன்பே அரும்ப,
தூயவ ராகி மக்கள்
துயராறு வாழ்வு பூக்க,
நேயமே உருவ மாகி
நிலத்தினில் பிறந்த அண்ணல்
தாயுமா னவராம் யோகி
தவத்திரு அடிகள் வாழ்க!

2

சமயங்கள் எல்லாம் தத்தம்
சமயமே உயர்வா மென்றே
அமைவுறக் கூறும் காலை,
ஆண்டவன் ஒருவன் என்றால்
சமயங்கள் எதற்கா மென்றார்?
சகமெலாம் சிவனே என்றார்;
இமயம்போல் தாயு மானார்
எழுதும்பா ஞானப் பாவே!

3

ஆலெனப் படர்ந்து நிற்கும்
வேதமோ டாக மத்தைச்
சாலவே சேர்த்துக் காணல்
சமரச ஞானம் என்றார்;
மூலமாம் சிவத்தைக் காட்டும்
முத்தமிழ்த் தேவா ரத்தை
ஞாலமே போற்றி உய்வீர்
நம்மறை அதுவாம் என்றார்!

4

புனிதமாம் நதியில் பூவை
உதிர்த்திடும் மரங்கள் போல,
நனிமிகு சிவமாம் போக
நலத்தினில் மனத்தை வைத்தால்
கனிகளாம் பேரின் பங்கள்
கடிதினில் பெறுவீர் என்ருர்,
பனிதமிழ்க் 'கண்ணி' பாடல்
பசுந்தமிழ் மறைக ளன்றே!

குறிப்பு :-

தாயுமானவர் தமிழ் நாடு மாநிலம் தந்த ஞானி யாவார். இவர் (கி. பி. 1705 - 1742) 18 ஆம் நூற்ருண்டில் வாழ்ந்தவர். இவர் திரு மூலர் மரபில் வந்த மௌனகுரு தேசிகரைக் குருவாகக் கொண்டு மெய்யறிவு பெற்றவர். இவர் வேதாந்த சித்தாந்த சமரசக் கொள்கையைப் பரப்பியவர்; ஆனல் இவர், தம் பாடல்கள் மூலம் சைவசித்தாந்தக் கொள்கைகளை மிகச்சிறப்பாக, தெளிவாக எடுத்து ஓதியவர்.

இவர் பராபரக் கண்ணி, பைங்கிளிக் கண்ணி எந்நாட் கண்ணி, காண்பேனே என் கண்ணி ஆகாதோ என் கண்ணி, இல்லையோ என் கண்ணி வேண்டாவோ என் கண்ணி, நல்லறிவே என் கண்ணி, பலவகைக் கண்ணி என ஒன்பது வகையில் பாடியுள்ளார். இவை, சைவ சித்தாந்த தத்துவங்களை விளக்கு வனவாய் அமைந்துள்ளன.

தியாகராசர்

1

பயிர்கள் வளர உணவாகிப்
பாரில் தொழில்கள் உருவாக்கி
உயிரை வளர்க்கும் மூச்சாகி
உதவும் காற்றின் துணைபோலத்
துயிலும் போதும் எப்போதும்
தொடர்ந்து வேலை செய்தாலும்
புயில்வாய் இராமன் நாமமெனப்
புகர்ந்தார் தியாக ராசரவர்!

2

தேனில் பழத்தை ஊறவைத்துத்
தெவிட்டா அமுதம் தருவதுபோல்
வானில் உலவும் ஒலியோடு
வாய்த்த மொழியைக் கலந்திங்கே
ஊனை உயிரை உணர்வதனை
உருக்கும் பண்கள் உருவாக்கி
ஞானம் ஊட்டும் இசையோகி
நலங்கள் பாடி நாமுய்வோம்!

3

நோயை விரட்டி அடிப்பதற்கும்
நுண்மை மனத்தை அடக்குதற்கும்
தீய குணங்கள் திரிவதற்கும்
தெய்வ அருள்கள் கூடுதற்கும்
நேயம் நிறைந்த பண்களிலே
நிதியாம் இசையை அளித்திட்டார்
வேயில் பிறந்த இசைத்துளியோ!
வேதப் பழத்தின் சாறிதுவோ!

4

விண்ணை நோக்கும் தாமரைப்பூ
விதிர்க்கும் மணத்தின் உணர்வலையும்

கண்ணை இழுக்கும் கலையழகும்
கவிதை கலந்த கனிமொழியில்

பண்ணில் குழைத்துப் பாவிசைத்தார்;
பலவாய் ''இராக'' இசையமுதம்

மண்ணில் நாதப் பிரம்மத்தின்
மாண்பார் அடியை வணங்குவமே!

குறிப்பு :-

தியாகராசர் தமிழ்நாடு மாநிலம் தந்த ஞானி யாவார். இவர் (கி. பி. 1767–1847) பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவருக்கு, 'தியாகப் பிரம் மம்'—என்ற பெயரும் உண்டு.

இவர் தெலுங்குமொழியில் பலப்பல கீர்த்தனைகளைச் செய்தவர். இசையில் மூழ்கித் தியானத்திலிருந்தபொழுது மெய்மறந்து பலவகையில் தம் கீர்த்தனைகளைப் பாடி யுள்ளார். இவர்தம் உருப்படிகளைத் ''தியாகப் பிரம் மோப நிஷத்'' என மக்கள் போற்றுவர்.

ஏழிசையாய், இசைப்பயனாய் இருக்கும் இறைவனை, இசையில் வல்லவர்கள் நாத உபாசனையினாலேயே அடையலாம் என்னும் கருத்தை வெளியிட்டுள்ளார். இவர், அதற்கு இலக்கணமாகத் திகழ்ந்த இசை ஞானியு மாவார்.

இராமலிங்கர்

1

தாயினும் சிறந்த அன்பும்
தளர்விலா அறத்தின் இன்பும்
பாயிரம் பெற்ற நூல்போல்
பத்தியை உணர்த்தும் நோக்கும்
கோயிலாய் உயர்ந்த தொண்டும்
கொண்டவர்; திருமு றைபோல்
தூயவர் இராம லிங்கர்
துணையடி வணங்கு நெஞ்சே!

2

தனித்தனி இனத்தார் தாமும்
தனித்தனி மதத்தார் தாமும்
மனத்தினால் வேறே யாகி
மாயையில் மயங்கி நிற்க,
நினைப்பினில் ஒன்று சேர்வீர்
நிறைதெய்வம் ஒன்றே என்றார்,
தனிப்புகழ் இராம லிங்கர்
தவமொழி அமுத மன்றோ!

3

அழகினை உருவ மாக்கி
அங்கங்கே தெய்வம் கண்டு,
பழகிய உருவி னுக்கே
பத்தியைச் செலுத்து வோர்பால்,
விழிசெறி ஒளிய ளிக்கும்
விரிசுடர் திருவி ளக்கைத்
தொழுதலே நெறியா மென்றார்;
தோன்றலாம் வடலூர் வள்ளல்!

4

பயிர்வளர் செடியி னுள்ளும்
பலப்பல விலங்கி னுள்ளும்
மெய்வளர் அறமே பேணும்
மேன்மைசேர் மனித னுள்ளும்

உயிரினில் ஒன்றி நிற்றல்
உயரன்பே எனத்தாம் எண்ணி
உயிர்க்கெலாம் அறமே செய்வீர்
உலப்பிலா 'வீடாம்' என்ருர்

5

பாரினைத் திருத்தும் பாடல்
பத்தியை உணர்த்தும் பாடல்
சீரிய சன்மார்க் கம்மாம்
சீலத்தைப் புகட்டும் பாடல்
பாரெலாம் ஒன்றே என்னும்
பண்பினை நல்கும் பாடல்
தேர்புகழ் இராம லிங்கர்
திருவருட் பாடல் தேறும்!

குறிப்பு :

இராமலிங்கர் தமிழ்நாடு மாநிலம் தந்த ஞானி யாவார். இவர் 5. 10. 1823ல் பிறந்தவர். பத்தொன்பதாம் நூற்ருண்டில் வாழ்ந்தவர். இவர் சித்தரும் ஆவார். இவர் எழுதிய பாடல்களின் தொகுப்பு 'திருவருட்பா' எனப்படும்.

இவர் வடலூரில் சமரச சன் மார்க்க சபையினை நிறுவினர்; அங்கு எம்மதத்தினரும் ஒருங்கு சேர்ந்து வழிபடும்படி சத்திய ஞானச்சபையைக் கட்டுவித்தவர்.

இவர், உருவ அமைப்பைக் காட்டிலும் ஒளி விளக்கு வழிபாடே சிறந்த தென்று அதனைத் தொடங்கி வைத்தார். "அருட்பெருஞ்சோதி தனிப் பெருங் கருணை" என்பது அடிகளின் அருள் வாக்காகும்.

எல்லா உயிர்களிடத்தும் இறைவன் உறைவதனல், எல்லா உயிர்களிடத்தும் கருணை காட்ட வேண்டுமென்றும், சீவகாருண்யத்தைப் பரப்ப வேண்டுமென்றும், இவ்வாறு ஆன்ம நேய ஒருமைப் பாட்டை உண்மையாக வளர்த்தால் அதுவே இறையருளக் கூட்டுவிக்கும் என்றும் கூறினர்.

சாகாக் கலையை அடிகள் எடுத்துக் கூறி, அவ்வாறே இவர் அடைந்தும் காட்டியவர்.

இரமணர்

1

ஓவியத்தின் சிலையதனின் உட்பொருளை
ஒளிர்கின்ற கலைகள் காட்டும்;
நாவியலில் பிறந்துறையும் நற்பொருளைக்
கவிவாணர் பாடல் கூறும்;
ஆவியுறை மக்களுக்கோ இரமணர்தம்
அன்புவிழி, பார்வை யாலே
ஏவுமிடர் வினைதீய்த்தே இறையருளைக்
காட்டுவிக்கும் கருணை காண்மின்!

2

பூங்கொன்றை மலர்பறித்தோன் பூதலத்தில்
பூவனைத்தும் 'தன்பூ' என்பான்;
ஈங்குலகில் செயல்முடித்தோன் இச்செயலை
'நான்'முடித்தேன் செய்தேன் என்பான்;
ஓங்கிவளர் இறையின்றி அணுவசையா
உண்மைகண்டும் உணரா தார்பால்
ஈங்குறைவீர் நானகற்றி வாழ்கவென
எடுத்துரைத்த ஞானம் போற்றி!

3

வித்தனைத்தும் உள்ளடக்கிப் பெருமரந்தான்
வளருதற்கு வளமை ஈயும்;
நித்தமுமே உள்ளடங்கி ஆசையெலாம்
நிலவுலகை ஆட்டி வைக்கும்;
அத்தனையும் மாயையென அகற்றிடுவார்
வாழ்வுதனில் அருள்கள் பூக்கும்
தத்துவத்தைப் போதித்தார் தாரணியில்
இரமணராம் ஞானப் பூங்கா!

குறிப்பு :-

இரமணர் தமிழ்நாடு மாநிலம் தந்த ஞானியாவார் இவர் (கி. பி. 1879–1950) இருபதாம் நூற்றுண்டில் வாழ்ந்தவர். இவர் இயற்பெயர் வேங்கடராமன். இவருக்கு, ஞானியாவதற்குரிய எண்ணங்களைத் தோற்று வித்த நூல் 'பெரியபுராணம்' ஆகும் என்று கூறுவர்.

இவர் செய்த நூல்கள் :- (1) உபதேச உந்தியார் (2) உள்ளது நாற்பது (3) பஞ்சகம் (4) அருணுசல ஸ்துதி (5) நான் யார்? என்பன.

இவர், ஐம்புலன்களின் சுகத்தைத் தியாகம் செய்ய வேண்டுமென்றும், இறையை உள்ளத்துக்குள்ளே இடையருது நினைந்து தியானம் செய்வதே இறையருள் பெற வழி என்றும் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

விருப்பத்தையும், அச்சத்தையும், சினத்தையும் துறந்தோராய், என் மயமாய், என்னை அடைக்கலம் புகுந்து ஞானத் தவத்தால் தூய்மைபெற்று என் இயல்பை எய்தினோர் பலர்.

—பகவத்கீதை; அத்தியாயம் 4
எண் 10

ஞானத்தின் ஞாதுரு நான்குமா ஞானிக்கு
ஞானத்தின் ஞானமே "நான்", எனது",
என்னுமல்
ஞானத்தில் யோகமே நாதாந்த நல்ஒளி
ஞானக் கிரியையே நன்முத்தி நாடலே!

—திருமூலர்; திருமந்திரம்;
ஞானம் பா. எண் 1447

படைக்கல மாகஉன் நாமத்
தெழுத்தஞ்சென் நாவிற்கொண்டேன்
இடைக்கலம் அல்லேன் எழுபிறப்
பும்உனக்காட் செய்கின்றேன்
துடைக்கினும் போகேன் தொழுது
வணங்கித்தூ நீறணிந்துன்
அடைக்கலம் கண்டாய் அணிதில்லைச்
சிற்றம் பலத்தரனே!

—திருநாவுக்கரசர்;
தேவாரம் (கோயில்)

அன்றே யென்றன் ஆவியும்
    உடலும் உடைமை எல்லாமும்

குன்றே அனையாய் யென்னைஆட்
    கொண்டபோதே கொண்டிலையோ

இன்றோர் இடையூறு எனக்குண்டோ
    எண்தோள் முக்கண் எம்மானே!

நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
    நானோ இதற்கு நாயகமே!

—மாணிக்கவாசகர்
திருவாசகம்; குழைத்தபத்து

திடவிசும்பு எரிவளி நீர்நிலம் இவைமிசை,
படர்பொருள் முழுவதும் ஆயவை அவைதொறும்,
உடல்மிசை உயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன்,
சுடர்மிகு சுருதியுள் இவையுண்ட சுரனே!

—நம்மாழ்வார்;
திருவாய்மொழி : முதற்பத்து
பாடல் எண் : 2681

பிள்ளையார் பதிப்பகம்